Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 7 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ரமழான் 17 (23.11.2002) சனிக்கிழமை இதழ் : 54


Pc PARADISE
நியாயமான விலையில் தரமான கணனிகளையும்
கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்
Pc Paradise
இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகில்)
TP No. 0777-271220
(சி-179)

# நெடுந்தீவு விவகாரத்தில் புலிகளுடன் பேசி

# சமரசத் தீர்வு காண ஜனாதிபதி பணிப்பு!

## நேற்று கொழும்பில் விசேட பாதுகாப்புக்குழு கூடியது

(கொழும்பு)

**நெடுந்தீவு விடயம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு சுமுகமான சமரசத்தீர்வை உருவாக்க நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை செய்துள்ளார். நேற்று நடைபெற்ற விசேட பாதுகாப்புக்குழுவின் கூட்டத்தின்போதே ஜனாதிபதியின் மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டது.**

நெடுந்தீவில் உருவாகியிருக்கும் பதற்றநிலை தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நேற்று நண்பகல் 1.30 மணியளவில், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற, மேற்படி விசேட பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் போது பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல உட்பட பல அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். இவர்களை விட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் எஸ்.தவராசா ஆகியோர் அடங்கிய மேற்படி கட்சியின் தூதுக்குழுவினரும் கலந்து கொண்டனர். அத்துடன் இக்கூட்டத்துக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் விசேட

(10ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

(யாழ்ப்பாணம்)

புத்தளத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர் நடாத்தி வரும் தாக்குதலைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தினர்.

நேற்றுக்காலை நாவாந்துறை, நாவலர் வீதியிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலிலிருந்து காலை 11 மணியளவில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நண்பகல் 12 மணியளவில் ஐந்து சந்தியை அடைந்தது. இதில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்களும் வர்த்தகர்களும் கலந்து கொண்டனர். இப் பேரணியில் முஸ்லிம் காங்கிரஸின் யாழ்.பிரமுகர் மூபின் சுபியான் தலைமை தாங்கினார். இப்பேரணியில் சென்றவர்கள் பல்வேறு சுலோகங்களைத் தாங்கிய பதாகைகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கிச் சென்றனர்.

(லி)

## ஈ.பி.டி.பி, தமிழ்க் கூட்டமைப்பு பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

### நெடுந்தீவு விவகாரம் குறித்து காரசார விவாதம்

(கொழும்பு)

நெடுந்தீவில் நிலவும் பதற்ற நிலை தொடர்பாக ஆராயுமுகமாக நேற்றுமாலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதமர் ரணில் கூட்டிய சந்திப்பில் - ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் மற்றும் தமிழ்கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

ஈ.பி.டி.பி. சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, தவராசா, பாஸ்கரன் ஆகியோரும் கூட்டமைப்பு சார்பில் இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார், மாவை. சேனாதிராசா, கிருஷ்ணபிள்ளை, துரைரட்ணசிங்கம், இராஜாகுகனேஸ்வரன் ஆகியோரும், புளொட் சார்பில் த.சித்தார்த்தன் ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் சுகு, ஈரோஸ் சார்பில் சங்கர்ராஜி ஆகியோர் நேற்றைய சந்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தூதரகப் பிரிவு யாழ்ப்பாணத்தில் அமையும்?

யாழ்ப்பாணத்தில், அமெரிக்கத் தூதராலயத்தின் உப அலுவலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான அடிப்படை வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் பேசும போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கம் - அமெரிக்கத் தூதராலயத்துக்கு இது தொடர்பான சகல உதவிகளையும், விட்டுக்கொடுப்புக்களையும் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - தனது பேச்சினிடையே, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், சர்வதேச சொந்தராத்துக்காரர்களின் ஏஜெண்ட் ஆகச் செயற்படுவதாகவும், இது வெட்ககரமானது என்றும் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டினார்.

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நெடுந்தீவு செல்ல அனுமதியில்லை



மாணவர்களை இடை மறிக்கும் படையினர்

உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் நெடுந்தீவுக்கு உணவுப் பொருட்களையும்,பால்மா வகைகளையும் நேற்று எடுத்துச் சென்ற யாழ். பல்கலைக் கழக மாணவர்களை நயினாதீவுக்கு அப்பால் செல்ல கடற்படை அனுமதிக்கவில்லை.

முன்னதாக, மாணவர்கள் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு செல்ல அனுமதி கேட்டபோது அதற்கு கடற்படையினர் மறுத்துவிட்டனர்.இதனால் மாணவர்களுக்கும் படையினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இறுதியில் பல்கலைக்கழக மாணவர்களை

(10ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவு இறங்குதுறையில் நெடுந்தீவுமக்கள் மறியல் போர்

(நயினாதீவு)

தம்மை நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரி நேற்று நயினாதீவில் சிக்கியுள்ள நெடுந்தீவு வாசிகள் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் நயினாதீவு இறங்குதுறையில் கூடிய இம்மக்கள் மறியல் போரில் குதித்தனர். இவர்களுக்கு ஆதரவாக நயினாதீவு மக்களும் போராட்டத்தில் பங்குபற்றினர்.

இம்மக்கள் நயினாதீவு இறங்குதுறைக்குச் சென்று நெடுந்தீவு செல்ல படகை ஒழுங்கு செய்யும்படி கோரியபோது, கடற்படையினர் அதற்கு மறுத்துள்ளனர். படகு

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்


நாடாளுமன்றத்த Zoo எண்டு நினைச்சிட்டாரோ அமுனுகம

## அரசாங்கம் கண்தெரியாத எலி கூட்டமைப்பு வான்கோழிகள்

### நாடாளுமன்றில் அமுனுகம விபரிப்பு

(கொழும்பு)

அரசாங்க பிரதிநிதிகளோடு புலிகளின் பிரதிநிதிகள் ஒரே மேடையில் அமர்வதை நாங்கள் எதிர்க்கின்றோம். இதைவிட அமெரிக்கா, பிரிட்டன் போன்ற சர்வதேசநாடுகள் புலிகளைத் தடை செய்துவிட்டு, அவர்களுடனேயே பேசப்போகின்றன. இது வேடிக்கையானது 'என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் அமுனுகம தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

நாட்டிலுள்ள கட்சிகளையும் அரசாங்கத்தையும் விலங்குகளுடன் ஒப்பிட்டுப் பேசிய அவர், அரசாங்கத்தைக்

(10ஆம் பக்கம் பார்க்க)

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
SERENDIB
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)

# மக்கள் ஆர்ப்பாட்டத்தை தடுப்பது எப்படி? சரசாலையில் இராணுவத்தினர் பயிற்சி!

(கச்சாய்)

சரசாலை கனகம்புளியடிச் சந்தியில் மக்களது வீடுகளில் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ள படையினர், ஆர்ப்பாட்டம் ஒன்றின் மூலம் மக்கள் முகாமுக்குள் நுழைந்தால் எவ்வாறு தடுக்க வேண்டும் என்பதற்கான ஒத்திகையொன்றை நடாத்திப் பார்த்தனர்.

படையினர் இருபகுதிகளாகப் பிரிந்து மக்களாகவும், முகாம் படையினராகவும் செயற்பட்டனர்.

மக்கள் தடைகளை மீறி, கற்களை வீசி, பொல்லுகள், தடிகள் சகிதம் உள்நுழைந்த போது, முகாம் படையினர் தடியடி நடாத்திக் கலைக்க முடியாது போகவே அவர்களின் கால்களுக்குக் கீழே சுட்டுக் கலகத்தை அடக்கியதாக படையினரின் பயிற்சி அமைந்திருந்தது. (33)

# இந்தியா பங்கேற்றாலேயே சார்க் மாநாடு நடைபெறும்

எதிர்வரும் ஜனவரியில் பாகிஸ்தானில் நடைபெறுவதாக இருக்கும் சார்க் மாநாடு - இந்தியா, பூட்டான் நாடுகள் பங்குபற்ற மறுக்கும் பட்சத்தில் பிற்போடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பாக இவ்வாரத்திற்குள் பூட்டானும் இந்தியாவும் தமது முடிவை அறிவிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

ஜனவரி 11 முதல் 13 வரை நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு, நேபாளம் என்பன பங்குபற்ற ஏற்கனவே தமது சம்மதத்தை வெளியிட்டுள்ளன.

# மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று சிரமதான நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இன்று பல்கலைக்கழக மாணவர்களால் சிரமதானம் செய்யப்படவுள்ளது.

அனைத்துப் பீடமாணவர்களையும் காலை 10 மணிக்கு மாணவர் பொது அறைக்கு முன்பாக ஒன்று கூடுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் எம்.சிவகுமாரன் அறிவித்துள்ளார். (ச)

# இலங்கைப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா ஆழமான கரிசனை

## தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அமெரிக்காவின் சார்பில் றிச்சர்ட் ஆர்மிரேஜ் கலந்து கொள்வது இலங்கைப் பிரச்சினை தொடர்பாக அந்நாடு கொண்டுள்ள ஆழமான கரிசனையை வெளிப்படுத்துவதாக அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அஸ்லி வில்ஸ், இலங்கையில் அமைதியை ஏற்படுத்த நீண்ட தூரத்துக்குப் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இது போலவே நிறைய செய்யவேண்டியுமுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# வடகிழக்கு அபிவிருத்திப் பணி; கொழும்பில் வேலைப்பட்டறை!

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பது தொடர்பான விசேட வேலைப்பட்டறை ஒன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறவிருக்கும் இவ்விசேட வேலைப்பட்டறை எதிர்வரும் முப்பதாம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவிருக்கிறது.

பொருத்தமான செயற்திட்டங்களுக்கான தேவை மதிப்பீடு செய்தல் செயற்திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், போன்ற விடயங்களில் பயிற்சியும், கருத்தரங்கும் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது. இவற்றைவிட விசேடமாக பாரிய புனர்வாழ்வு செயற்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் துறைசார் நிபுணர்களின் விளக்கவுரைகளும் இவ்வேலைப் பட்டறையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி விசேட வேலைப்பட்டறையில் கலந்து கொள்வதற்காக யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான சுமார் இருபது அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று கொழும்புக்குச் செல்லவுள்ளது.

# வேட்டைக்குச் சென்றவர் பன்றி தாக்கிப் படுகாயம்!

(வடமராட்சி)

வேட்டைக்குச்சென்ற இளைஞர் குழுவினரைக் காட்டுப்பன்றி தாக்கியதில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் வேட்டைக்கு உதவுவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட நாயும், பன்றி தாக்கி இறந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை குடத்தனை கிழக்கிலுள்ள காட்டுப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த ப.குணராஜா (வயது 36) என்பவரே உடல் முழுவதும் பலத்த காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனித்து நின்ற பெரிய பன்றியொன்றைச் சுற்றி வளைத்துக் கொல்ல முயன்ற வேளையே இச்சம்பவம் நடைபெற்றது. (23)

# திருமறைக் கலாமன்ற கொடிவாரம்

பல்வேறு கலைப்பணிகளை ஆற்றிவரும் திருமறைக் கலாமன்றம் - தனது செயற்பாட்டிற்குத் தேவையான நிதியைத் திரட்டி கலைப் பணிகளை மேம்படுத்துமுகமாக நவம்பர் 28 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 3 ஆம் திகதி வரை கொடி வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

திருமறைக் கலாமன்றம் அமைந்துள்ள - யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், புத்தளம். வவுனியா, முல்லைத்தீவு, பாணந்துறை, இளவாலை போன்ற இடங்களில் இக்கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (4)

# திறந்த பல்கலைக்கழக சட்டமாணி கற்கைநெறிக்கு 19 பேர் தெரிவு

(நமது நிருபர்)

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் 2002/2003 கல்வியாண்டுக்கான சட்டமாணிக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நா.இராசநாயகம் (யாழ்ப்பாணம்), வே.பரிமேலழகபிள்ளை (நீர்வேலி), திருமதி சு.நிரஞ்சி (யாழ்ப்பாணம்), கெ.சிறிதயானந்தி (யாழ்ப்பாணம்), ரி. சறோஜா (யாழ்ப்பாணம்), ந.வனிதா (யாழ்ப்பாணம்), சிவரட்ணம் (யாழ்ப்பாணம்), நவரட்ணம் (பருத்தித்துறை), லக்ஷிதன் (யாழ்ப்பாணம்), தாட்சாயினி (அல்வாய்), மரியபத்மதர்ஷினி (யாழ்ப்பாணம்), சி.சிவமலர் (இளவாலை), சுகேந்திரன் (கொக்குவில்), கிரிகாந்தன் (யாழ்ப்பாணம்), இ.ராதிகா (மானிப்பாய்), செல்வி. மி.சிவலிங்கம் (யாழ்ப்பாணம்), ஆர்.சகித்தா (சாவகச்சேரி), சயந்தநாதன் (யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (யாழ்ப்பாணம்) ஆகியோரே தெரிவானவராவர். யாழ்.மாவட்டத்திலிருந்து 360 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்த போதிலும் 19 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாநகரசபை அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டப் போட்டி

(நெல்லியடி)

இலங்கையில் உள்ள அனைத்து மாநகர சபைகளுக்குமான மாநகர முதல்வர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதியும் டிசம்பர் 1ஆம் திகதியும் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் ஒரு அணியில் 7 பேர் பங்குபற்ற முடியும். இதில் முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 7 ஆயிரத்து 500 ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

இம்முறை யாழ். மாநகரசபை அணியும், இப்போட்டியில் பங்குபற்றும் பொருட்டு அணித் தெரிவுகளை மேற்கொண்டுள்ளது. (13)

## 12 வருடங்களின் பின்னர் தீவகத்திலும் மாவீரர்நாள்

(ஊர்காவற்றுறை)

12 வருடங்களின் பின் ஊர்காவற்றுறைப் பகுதியில் உணர்வு பூர்வமாக மாவீரர் தின நிகழ்வுகளை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தமிழீழ மண்மீட்புப் போராட்டத்திற்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூருமுகமாக ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வையொட்டி, ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள கடைகள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும், வீதிகள்தோறும் மாவீரர்களை நினைவு கூரும் பதாகைகள் கட்டப்பட்டும் உள்ளன.



மக்கள் வங்கி யாழ்.கன்னாதிட்டிக் கிளை நவீன முறையில் கணினி மயப்படுத்தப்பட்டு கடந்த திங்கள் முதல் தன் சேவையை வழங்குகிறது. முதல் வைப்பினை வாடிக்கையாளரிடம் இருந்து பிராந்திய உதவி முகாமையாளர் க.ஆனந்தராசா பெற்று சேவையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# இன்றைய நாள் இனிய நாள்

## 23-11-2002 - சனிக்கிழமை

சித்திரபானு வருடம் - 7ம் திகதி - சனி.

| | |
|---|---|
| நட்சத்திரம் | :- திருவாதிரை - இரவு - 11.55 வரை அதன் மேல் - புனர்பூசம் |
| ராகுகாலம் | :- 9.11 - 10.41 |
| திதி | :- அபரபட்ச குருதியை அதன்மேல், சதுர்த்தி |
| சுபநேரம் | :- 3.11 - 4.41. |

| | |
|---|---|
| மேடம் | :- எடுத்த காரியம் வெற்றி, தெய்வவழிபாடு, கலைரசனை, விருந்தினர் வருகை, சிற்றுண்டி பரிமாறல், கல்விநிலை சமம், வியாபார முன்னேற்றம். |
| இடபம் | :- தேகசுகக் குறைவு, சேமிக்கும் சிந்தனை இராது, மனச்சஞ்சலம், பெண்களினால் சண்டை, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம். |
| மிதுனம் | :- மனமகிழ்ச்சி, உறவினர் நண்பர்கள் மகிழ்ச்சி, உடல் குளிர்ந்த உணவு, பெண்கள் உளப்பூரிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார நிலைசமம். |
| கர்க்கடகம் | :- தேகசுகக்குறைவு, தன்னை அறியாத செலவு, அயலவர்களுடன் மௌனம் சாதித்தல் வேண்டும். மனச்சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| சிங்கம் | :- செய்தொழில் லாபம், புத்திரர்களால் நன்மை, பணவரவு, நண்பர்களுடன் மகிழ்ச்சி, ஆனந்தமான மன அமைதி, கல்விமுன்னேற்றம், வியாபார நிலை சமம். |
| கன்னி | :- புதிய தொழில் முயற்சி, பொது சேவையில் மதிப்பு, தொழிலாளருடன் நல்லுறவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் | :- தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, மனச்சஞ்சலம், எதிரிகளின் தொல்லை, தேவையற்ற பய உணர்வு, கல்வி நிலை சமம், வியாபார முன்னேற்றம். |
| விருச்சிகம் | :- எதிர்பாராத பயம், பயணங்களைத் தவிர்த்தல் வேண்டும், புதிய முயற்சிகளை தவிர்த்தல் வேண்டும், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| தனு | :- மனமகிழ்ச்சி, பெண்களால் மகிழ்ச்சியடைதல், ஆடை அலங்காரம், கௌரவம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மகரம் | :- பணவரவு, எடுத்தகாரியம் வெற்றி, புதியகடன், எதிரி மௌன நிலை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் |
| கும்பம் | :- தேகசுகக் குறைவு, புத்திரர் சுகக்குறைவு, வைத்தியச் செலவு, சீர்திருத்த வேலையிலிருந்து பின்வாங்குதல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| மீனம் | :- வீண் அலைச்சல், மாதா சுகக் குறைவு, வைத்தியச் செலவு, பணவரவு குறைவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |


தளராத உறுதியுடன் இரும்பின் சுரங்கமாக ஸ்ரான்லி வீதியினை விடியவைக்கும் விளக்கு

ஜம்போ ஹாட்வெயர்

இல.129, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0777 ~ 733681



ராஜா
யாழ்ப்பாணம்.



STR பிலிம்ஸ் வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)



நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், மந்திரா நடித்த
லவ் ருடே
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும் இரவு 8.45 காட்சி
UNIVERSAL SOLDIER
(சி-139)

# பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக 3 கோடி 10 லட்சம் டொலர் உதவி!

## வடக்கு - கிழக்கிற்கு உலக வங்கி வழங்கும்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கும், சமாதான நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கும் என உலக வங்கி 3 கோடி 10 லட்சம் அமெரிக்க டொலரினை வழங்க முன்வந்துள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில வாழும் மக்கள் அனுபவித்து வரும கஷ்டங்களுக்கு விரைவில தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்தைப் அடிப்படையாகக் கொண்டே, இந்த நிதியுதவி துரிதமாக வழஙகப்பட்டுள்ளது.

அவசர புனரமைப்பு நடவடிக்கைகள, இந்நிதியுதவி கொண்டு ஆரமபிக்கப்படவுள்ளன. அடிப்படைச் சுகாதார வசதிகள், நகர்ப்புற நீர் விநியோகத்திட்டம், சொந்த இடங்களில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு தொழில் முயற்சிகளை ஆரமபித்தல் மற்றும் வேலைவாய்ப்பு என்பனவற்றிற்கு உதவிகள் வழங்கப்பட வுள்ளமை முக்கிய அம்சமாகும்.

உலக வங்கியின் நிதியுதவி மூலம் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கு மாகாணசபை நிர்வகிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பெண்கள் மீதான வன்முறையை தடுக்க தனி பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

பெண்கள் மீதான வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்காக சகல பொலிஸ் நிலையங்களிலும் பெண்களுக்கான தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்படும் என்று மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி இரத்நாயக்கா தெரிவித்தார்.

சனத்தொகையில் பெண்களின விகிதாசாரம் 53 வீதமாக அதிகரித்துள்ளது. வன்முறைகளில் இருந்து பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27

மண்ணின் மைந்தர்களாக மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தங்கள் உயிருக்கு மேலாக தமது நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள், இந்த உன்னதமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங் களது குழந்தைகள் சாகவில்லை, சரித்திரமாகி விட்டார்கள்.

வே. பிரபாகரன்
*தமிழீழத் தேசியத் தலைவர்*

# தரம் 5 புலமைப் பரிசில் பெற வருமான உச்ச வரம்பு அதிகரிப்பு

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசுப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கப்படுவதற்குக் கணிக்கப்பட்டுவந்த பெற்றோர் பாதுகாவலரின் மாதாந்த வருமான எல்லை 500 ரூபாவில் இருந்து 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

500 ரூபா அதற்குக் குறைவான வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கே இதுவரை புலமைப் பரிசில் நிதி வழங்கப்பட்டு வந்தது. இவ்வருமான எல்லை கடந்த 24 ஆண்டுகளாக அமுலில் இருந்து வருகின்றமையால் காலத்துக்குப் பொருத்தமான முறையில் இதனை மாற்றியமைக்கத் தீர்மானித்ததாக கல்வி அமைச்சின் செயலாளர் நாணயக்கார அறிவித்துள்ளார்.

இந்தத் திருத்தத்தின் பிரகாரமே, 2003ம் ஆண்டு தொடக்கம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

சமுர்த்தி திட்டத்தின் மூலமாக பெறப்படும் உதவிப்பணம் வருமான எல்லைக்குள் சேர்க்கப்படமாட்டாது என்றும் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கியமானதாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரை தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணுக்கு உரமாக்கி விட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்கள் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்படமுடியாதவையாகும். புனிதத்தன்மை வாய்ந்ததுமாகும். காலங்காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும். மாவீரர்களது இத்தகைய நினைவுகூரல் என்பது, ஒரு நிகழ்வாக இருந்து விடாது. எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமா கவும், உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின் றோம்.

- தமிழீழ மாவீரர் பணிமனை.

# புனரமைப்புக்கான 50 கோடி டொலர் ரோக்கியோவிலேயே பெறப்படுமாம்!

## ஒஸ்லோ மாநாடு தொடக்கம் மட்டுமே

சமாதான நடவடிக்கைகளின் வேகம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமானால் நிதியுதவி மிக அவசியமானது என்று அரசாங்கம் கருத்து தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் பொறுமை இழந்துவிட்டால் நாடு மீண்டும் யுத்த நிலைமைக்கு இட்டுச் செல்லப்படும் என்பதால், தற்சமயம் ஒரு இக்கட்டான காலகட்டமாகும். அரசாங்கம் சென்ற வருடம் இலகுக் கடன்களாக 20 கோடி டொலர்களை பெற்றிருந்தது. புனரமைப்புக்கு மாத்திரம் அடுத்த ஐந்து வருட காலத்தில் 50 கோடி டொலர்கள் தேவைப்படும். இத்தகைய பாரிய தொகை பற்றி ஒஸ்லோ மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்படமாட்டாது. ரோக்கியோவில் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் பல்தேசிய உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டின்போது, இந்த விடயம் பறறி ஆராயப்படும்.

இதேவேளை, உலக வங்கியின் பணிப்பாளர் பீட்டர் கெரோல் கருத்துத் தெரிவிக்கையில் - முக்கியமாக இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கே பெருமளவு நிதி தேவைப்படும். ஆனால் ஒஸ்லோ மாநாடு, நிதி உதவிகளைச் சமாதான நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தும் என்றார்.

### ஒஸ்லோவுக்கு அரசகுழு இன்று புறப்படுகிறது

ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொள்ளும் அரசாங்கத் தூதுக் குழுவினர் இன்று கொழுமபலிருநது ஒஸ்லோவுக்கு புறப்படவிருககின்றனர். ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்கள் பேராசிரியா ஜி. எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோா் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.



யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் ஜி.ரி.சற் கல்விப் பரிவின் ஆதரவில் உள்ளகப் பயிற்சியை மேற்கொள்ளும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான செயலமர்வும் கருத்தரங்கும் அண்மையில் நடைபெற்றது. இடண்டாம் நாள் கருத்தரங்கில் நடன விரிவுரையாளர் ஞா.கணேசநாதன் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அரச சேவை, பொலிஸ் சேவை ஆணைக்குழுக்கள் நியமனம்!

## ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் யாப்பின் 17வது திருத்தத்தின் பிரகாரம் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவையும் அரசாங்க சேவை ஆணைக்குழுவையும நேற்று முன்தினம் நியமித்துள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரியாவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவராக சிரேஷ்ட இராஜதந்திரி றெட்லி வெண்டகேட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# காணி உச்ச வரம்புச்சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில்!

## காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவிப்பு

(கொழும்பு நிருபர்)

எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய காணிப் பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக காணிச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக காணி அமைச்சர் ராஜித சேனாரத்தின நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் காணிகளை ஒதுக்கீடு செய்யும்போது ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவே தனிநபர் ஒருவர் வைத்திருக்கக்கூடிய ஆகக்கூடிய நிலப்பரப்பின் எல்லை வரையறை செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய சட்டங்களின் மூலம் பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் தனிநபர் ஒருவர் 20 பேர்ச் காணியையும், நகரசபை எல்லைக்குள் வசிக்கும் தனிநபர் 10 பேர்ச் காணியையும், மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் ஒருவர் ஆகக்கூடியது 6 பேர்ச் காணியையுமே சொந்தமாக வைத்திருக்க முடியும் எனக் காணி உச்சவரம்பு சட்டங்கள் கொண்டுவரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகாபரமேஸ்வரி தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்ட "சாமுண்டி கானம்" ஒலிப்பேழை வெளியீட்டுவிழாவில் பாடல்களைப் பாடிய பொ.சக்திவேலுக்கு 'அருட்கவியரசன்' பட்டமளித்து, மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

### ரமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.58 |
| சுபஹ் | 5.13 |
| உதயம் | 6.33 |
| லுஹர் | 12.28 |
| அஸர் | 3.50 |
| ம.்.ரிப் | 6.21 |
| இஷா | 7.34 |

# திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வீதங்கள் குறைப்பு!

திறைசேரி உண்டியல்களுக்கான இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் வட்டி வீதம் 10.5 சத வீதத்தில் இருந்து 9.7 சதவீதமாக நேற்று முதல் குறைககப்பட்டுள்ளது.

இதனால் வர்த்தக வங்கிகளும் ஏனைய நிதித்துறை சார்ந்த நிறுவனஙகளும் தம்மிடம் உள்ள மேலதிக நிதியை திறைசேரி உண்டியல்களைக கொள்வனவு செய்வதில செலவிட முடியும். இதனடிப்படையில் நாட்டின் அபிவிருததியைத் துரிதப்படுத்துவதற்கும், வாழ்க்கைச செலவைக் குறைப்பதற்கும் மேற்கொள்ளப் படும் செயற்திட்டம் மேலும் அபிவிருத்தி அடைந்த வகையில் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# பகவான் சத்ய சாயிபாபாவின் 77வது அவதாரதினம் இன்று

நவம்பர் 23 பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் பிறந்ததினத்தை நாம் கொண்டாடுகிறோம். சத்திய சாயிசேவா சமித்திகளில் விமரிசையாகக் கொண்டாப்படுகின்றது.



புட்டபர்த்தி இன்று இந்திரலோகமாகவா, பரலோகமாகவா, வைகுண்டமாகவா கைலாசமாகவா விழாக்கோலம் கொண்டிருக்கும்? ஆனால், ஒவ்வொரு பிறந்ததின விழாவிலும் ஒரே மாதிரியான விடயத்தினை நாம் அவ தானிக்கலாம். என்ன அது?

"ஹப்பி பேர்த்டே டு யூ பகவான்" என்று பக்தர்கள் பகவானுக்கு பிறந்ததின வாழ்த்து வழக்கமாகச் சொல்வார்கள். அதாவது சந்தோஷமான பிறந்த தின வாழ்த்துக்கள் என்பார்கள். அப்பொழுது பகவான் எல்லாப் பிறந்த தினங்களிலும் ஒரே மாதிரியான பதிலையே சொல்வார்.

"நான் என்றும் சந்தோஷமாகவே இருக்கின்றேன். எனக்கு சந்தோஷம் என்று சொல்லிப் பயன் இல்லை.
உங்களுக்குத்தான் சந்தோஷம் வேண்டும்" என்பார்.

ஒரு முறை குடிசன மதிப்பீட்டு அதிகாரி பகவானிடம் கேட்டார்.
உங்களுக்குப் பெயர் என்ன?
எல்லாப் பெயரும் என்னுடைய பெயரே!.
உங்கள் பிறந்த தினம?,
நான் என்றுமுள்ளவன். என்றார்.

அவர் பிறந்தாரா? பிரவேசித்தார், தனது தாயைத் தேர்ந்தெடுத்தார். அவர் யார்? எங்குமுள்ளவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்., விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டாத விழுப்பொருள் மண்ணகத்தே வந்து எங்களை வாழச் செய்கிறது.

*புவனியில் போய் பிற வாமையின் நாள் நாம்*
*போக்கு நின் றோஅவ மேயிருந்தப் பூமி*
*சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்*
*திருப் பெருந்துறை யுறை வாய் திருமாலாம்*
*அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்*
*படவும் நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்*
*அவனியில் புகுந்தெம்மை ஆட்கொள்ள வல்லாய்*
*ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே* - **திருப்பள்ளியெழுச்சி.**

நாங்களும் இந்தப் புவனியில் வந்து பிறந்திருக்கின்றோம். இறைவனும் அவனியில் புகுந்திருக்கிறான். எங்களை ஆட்கொள்ள வந்திருக்கிறான். இன்று ஆழ்துயிலாகிய அறியாமையில் உழன்று கொண்டிருக்கும் எங்களைத் திருப்பள்ளியெழுச்சி பாடி எழுப்ப முயல்கிறான்.

சுவாமி சொன்ன கதையை இங்கே தருவது பொருத்தமாய் இருக்கும்.

ஒரு சாபம் காரணமாக இந்திரன் பன்றியாய்ப் பிறந்துவிட்டான் . சேற்றில் தப்பி தனது குடும்பத்துடன் அக மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கின்றான். ஸ்ரீ விஷ்ணு பார்த்தார், பாவம் இந்திரனுக்கு சாபவிமோசனம் கொடுத்து அவனை மீட்போம் என்று அவனிடம் வந்தார். "இந்திரா உனக்குச் சாபவிமோசனம் தர வந்திருக்கிறேன் என்றார். உடனே இந்திரனாக இருந்த பன்றி சொன்னது "என்னைக் குழப்பாதீர்கள். இந்தச் சேற்றிலே எவ்வளவு ஆனந்தமாக எனது குழந்தை, குட்டிகள் எல்லாவற்றுடனும் இருக்கின்றேன். இதனைக் கெடுத்து விடாதீர்கள்! என்றான்."

இன்று எங்கள் முன்னே தெய்வம் வந்து எமது அறியாமையை அகற்ற முயல்கிறது.

தெய்வீக அன்பு சொரூபிகளே!
தெய்வீக ஆனந்த சொரூபிகளே!
தெய்வீக ஆத்ம சொரூபிகளே!

எந்த அன்பை, எந்த ஆனந்தத்தை, எந்த உயர்வுகளைத் தேடிக் கொண்டிருக்கிறோமோ, அவைகளே நாங்கள் என்ற உண்மையை, நாங்கள் மறந்த அந்த உண்மையை உணர்த்த வந்திருக்கிறார்.

இந்தப் பிறந்ததின விழாக்கள் எப்போது அர்த்தமுள்ளவைகளாக மாறும்?

"உனது இதயத்தில் எப்பொழுது தெய்வீகம் மலர்கிறதோ அப்பொழுது உன்னில் என்னுடைய பிறந்த தினத்தை நீ கொண்டாடலாம்" என்கிறார் பாபா.

அதனால்தான், உண்மை உணர்ந்த ஒரு முதியவரிடம் போய் உங்களது வயது என்ன என்று கேட்டபொழுது, அவர் எட்டு என்றார்.

என்ன இப்படிச் சொல்கிறீர்களே என்றால், அவர் சொன்னார் - எனது உடலுக்கு எண்பது வயது. ஆனால் எனது உண்மை எனக்குத் தெரியவந்து எட்டு வருடம். எனது உண்மை என்ன?

வேதங்கள் சொல்கின்றன- அமிர்தஸ்ய புத்ரா- அமரத்துவமானவன், அழிவற்றவன், என்றுமுள்ளவன். யேசுபிரானிடம் பரம மண்டலம் எங்கேயிருக்கிறது என்று கேட்டபொழுது-

- எனது இதயத்தில் என்றார். அப்படியாயின் பரமபிதாவும் எனது இதயத்தில் இருக்கிறார். நான் அறிய வேண்டியது என்ன? இறைவன் எனது இதயத்திலே நானாக இருக்கிறார்.

இந்த உண்மையை மலர வைக்கவே சாயி அவதாரம் வந்திருக்கிறது.

விவேகானந்தர் சொன்னார்-

"எனது பணி உண்மையாகவே ஒரு சில வார்த்தைகளில் சொல்வதானால், மனிதனுக்கு அவனுடைய தெய்வீகத்தைச் சொல்லி அதை எப்படி அவன் தனது நாளாந்த வாழ்க்கையில் பரிணமிக்கச் செய்யலாம், வெளிப்படுத்தலாம் என்பதே" ஏன்றார்.

பகவான் பாபாவும் "மனிதனின் உள்ளுறை தெய்வீகத்தை வெளிப்படுத்தவே வந்துள்ளேன்" என்றார். அதற்காகவே ஸ்ரீ சத்திய சாயி சேவாசமித்திகள் தொடங்கப்பட்டன.

(i). மதம் என்பது ஒன்று, அது அன்பு மதம்.
மொழி என்பது ஒன்று, அது இதய மொழி.
சாதி என்று ஒன்று, அது மனித சாதி.
கடவுள் என்பவர் ஒருவர், அவர் எங்கும் நிறைந்தவர்.

(ii). நீ பதார்த்தத்தைப் பார்க்கிறாய், பரார்த்தத்தை அதிலே காணவேண்டும்.

(iii). நீ காரியத்தைக் காண்கிறாய், காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(iv). நீ பலவற்றைக் காண்கிறாய், பலவற்றில் இருக்கும் ஒன்றைக் காண வேண்டும்.

(v). நீ வெளிப்போர்வையைப் (**Wrapping**) பார்க்கிறாய், அது உன்னைச் சிக்க (**Trapping**) வைக்கிறது. உள்ளுறை தெய்வீகத்தை நீ காணவேண்டும்.

(vi). நீ அடுத்தவனைக் (**Others**) காண்கிறாய். அவனும் நீ தான் என்பதை உணரவேண்டும். இதற்கு எல்லாம் நீ முதலாவதாகச் சொன்ன விடயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும், அறிந்து கொள்ள வேண்டும், அனுபவிக்க வேண்டும். சாயி என்ற தெய்வீகக் குழந்தை எங்களிடையே தோன்றட்டும். உண்மையான அதன் பிறப்பைக் கொண்டாடுவோம்.

**மு.க.சிவபாதவிருதயர்**
ஆத்மீக இணைப்பாளர் (வட பிராந்தியம்)

# ஈ.பி.டி.பி.முகாம்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

சாவகச்சேரி,நெடுந்தீவுப் பகுதிகளில் ஈ.பி.டி.பி. முகாம்கள் தாக்கபபட்ட சம்பவத்தையடுத்து, அனைத்து ஈ.பி.டி.பி. முகாம்களுக்கும் பொலிஸ் மற்றும் கடற்படையினர் பாதுகாப்பை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.



இது தொடர்பாக நேற்று முன் தினம் மாலை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா ஆகியோருக்கு இவ்வுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நிலைமை சுமுகமடையும் வரை இப்பாதுகாப்பு நிலையைப் பேணுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். பாதுகாப்புக் கடமையில் பொலிஸ் மற்றும் கடற்படையினரை ஈடுபடுத்துமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி, நெடுந்தீவுப் பகுதிகளில் ஈ.பி.டி.பி. முகாம்களைத் தாக்கியோரைக் கைது செய்யுமாறும் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளமை தெரிந்ததே.

(01)

# யாழ்.குடாநாட்டில் மூடப்பட்டுள்ள வீதிகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ்.கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் மூடப்பட்டுள்ள வீதிகளை திறப்பது தொடர்பாக ஆராயப்பட்ட கூட்டத்தில், யாழ். மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதியால், குடாநாட்டில் மூடப்பட்டுள்ள வீதிகள் தொடர்பான விரிவான அறிக்கை கையளிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டுக்கான படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பப்பட்ட இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| மூடப்பட்டுள்ள வீதியின் பெயர் | தடைசெய்யப்பட்டுள்ள தூரம் | இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் |
|---|---|---|
| 1. மண்டைதீவு பிரதான வீதி கிழக்குப் பகுதி. | 2 கி.மீ | பாடசாலைக்குச் செல்வதிலும், சந்தைக்குச் செல்வதிலும் பாதிப்பு |
| 2. வேலணை - புளியங்கூடல் சந்தி சேர். வைத்தியலிங்கம் துரைசாமி ம.ம.வி. ஊடாக. | 2 கி.மீ | பாடசாலைக்கு மாணவர் செல்வதிலும் பொதுமக்களுக்கும் பாதிப்பு |
| 3. ஊர்காவற்துறைச் சந்தி காரைநகர் துறைமுகம் வரை | 5 கி.மீ | துறைமுகத்தால் பிரயாணம் மேற்கொள்ள முடியாது.. |
| 4. கரம்பன் வீதி செபஸ்ரியன் தேவாலயத்திலிருந்து கண்ணகி அம்மன் கோவில் துறைமுகம் வரை. | 1.5 கி.மீ | துறைமுகத்திற்குப் போக முடியாமல் |
| 5. நயினாதீவு பிரதான வீதி நாகவிகாரை வீதி. | 0.5 கி.மீ | விகாரை ஊடாக மறுபிரதேசங்களுக்குச் செல்ல முடியாமை |
| 6. புலோலி - பல்லப்பை வீதி. | 1.25 கி.மீ | ஆனைவிழுந்தான் மயானத்திற்கும், நெல்லியடி தேவாலயத்திற்கும் செல்லமுடியாமை. |
| 7. பருத்தித்துறை - தாளையடி வீதி. | 5.00 கி.மீ | நாகர்கோவில் கடற்கரை வீதி பாதிப்பு. |
| 8. பருத்தித்துறை - சுப்பர் மடம் வீதி. | 1.25 கி.மீ | 751 பஸ் போக முடியாமை. |
| 9. சித்தி விநாயகர் வீதி. | 0.5 கி.மீ | துறைமுகத்துக்கு செல்ல முடியாது. |
| 10. பருத்தித்துறை - ஹாட்லிக் கல்லூரி வீதி. | 0.5 கி.மீ | பாடசாலை செல்வதற்கும் சுப்பர் மடத்திற்கும் போக முடியாமை |
| 11. புகையிரத நிலையம் - ஆரியகுளம் வீதி. | 0.8 கி.மீ | ஆஸ்பத்திரிக்கு செல்வதற்கு பாதிப்பு. |
| 12. யாழ். மணிக்கூட்டுக் கோபுர வீதி. | 0.9 கி.மீ | ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு பாதிப்பு. |
| 13. விக்டோரியா வீதி | 0.8 கி.மீ | வியாபார ஸ்தாபனங்கள் பாதிப்பு |
| 14. மீற்றாஸ் கன்னி வீதி (யாழ்). | 0.5 கி.மீ | 4ஆம் குறுக்குத் தெருவுக்குப் போவதற்குப் பாதிப்பு |
| 15. 4ஆம் குறுக்குத் தெரு - சின்னக் கடைவீதி. | 0.3 கி.மீ | சந்தைக்குச் செல்வதற்குப் பாதிப்பு |
| 16. கடற்கரை வீதி | 6 கி.மீ | கொழும்புத்துறை கிராமம் பாதிப்பு |
| 17. ஆரியகுளம் வீதி. | 0.3 கி.மீ | மாலை 8 மணிக்குப் பிறகு செல்வதற்குத் தடை. |
| 18. மணிக்கூட்டுக் கோபுரவீதி. | 0.5 கி.மீ | மாலை 7 மணிக்குப் பின் செல்வதற்குத் தடை. |
| 19. ஞானப்பிரகாசம் றோட் உடுவில் பாடசாலையிலிருந்து மல்வம் வரை. | 0.3 கி.மீ | மல்வம் மயானத்திற்கும தேவாலயத்திற்கும் தடை. |
| 20. சுன்னாகம் - காசி வீதி. | 0.7 கி.மீ | மீள்குடியேற்ற இடம் பாதிப்பு. |
| 21. மானிப்பாய் - உச்சி ஓடைவீதி. | 0.3 கி.மீ | கிராமத்துக்கு செல்வதில் தடை. |
| 22. திருவடி நிலை - சேந்தாங்குளம் இராணுவமுகாம் வரை. | 15 கி.மீ | முழுப்பிரதேசமும் பாதிப்பு. |
| 23. உசன் பாடசாலை வீதி. | 0.5 கி.மீ | பாடசாலைக்குச் செல்வதிலும் மக்கள் பிரயாணம் செய்வதிலும் பாதிப்பு. |
| 24. எழுதுமட்டுவாள் தெற்கு நாகர் கோயில் வீதி. | 9 கி.மீ | முழுப்பிரதேசம் தடை. |
| 25. மிருசுவில் ஓடக்கரை வீதி | 2 கி.மீ | முழுப்பிரதேசம் தடை. |
| 26. பருத்தித்துறை - மருதங்கேணி வீதி. | 18 கி.மீ | எல்லா நிகழ்வுகளும் பாதிப்பு. |

# மீன்பிடிக்க அனுமதிக்கப்படாத துறைமுகங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில்-கெருடாவில், தொண்டமனாறு, கொட்டடி, கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் ஒவ்வொரு மீன் பிடித்துறைமுகங்களில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படவில்லை.

காரைநகர் 03, சம்மியல் துறை 01, மாதகல் 02, இளவாலைத் துறைமுகம் 01 ஆகிய துறைமுகங்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

# மீன்பிடிக்க அனுமதிக்கப்படாத இறங்குதுறைகள்

(யாழ்ப்பாணம்)

**பண்ணைக்கு கிழக்குப் பகுதி**

குருநகர், கல்முனை வாடி, கொழும்புத்துறை, மணியம் தோட்டம், உதயபுரம், பூம்புகார், அரியாலை கிழக்கு பகுதிகளில் உள்ள இறங்குதுறைகள் மீன் பிடிப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை.

**பண்ணை மேற்குப் பகுதி**

நாவாந்துறை, நவாலி, மூளாய், தோப்புக்காடு, நீலங்காடு ஆகியவற்றில் தலா ஒவ்வொரு இறங்குதுறைகளில் மீன்பிடிப்பதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

## வார்த்தை விளையாட்டு — 08

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 ப | | 3 | 4 |
| ம | 5 | | க | | |
| | | | | 6 ம | |
| | 7 | ங் | | | |
| 8 | | 9 | | த | |
| | | | 10 அ | | |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. கசப்பான காயையும் இனிப்பான பழத்தையும் தரும் மரம்
3. அன்னைக்கு மறு பெயர்
5. பணம் பொருள் உற்பத்தி
6. மானை ஒத்த காட்டு மிருகம்
7. அவுஸ்ரேலியாவின் தனித்துவ விலங்கு
8. வனம் ~ ஒத்த கருத்து
9. எழுதுவதற்கும் அச்சிடுவதற்கும் பயன்படும்
10. தீயவர்களின் ஆயுதம்

### மேலிருந்து கீழ்

2. நீளமான காய்
4. குளங்களில் மலரும் மலர்
6. வயலும் வயல் சார்ந்த நிலமும் இப்படி அழைக்கப்படும்.
7. இது சிறிதானாலும் காரம் பெரிது (சமையலுக்குப் பயன்படும்)
8. இரும்பை ஈர்க்கும். (கீழிருந்து மேலாக)

### வார்தைை விளையாடடு - 7 இன விடைகள

**இடமிருந்து வலம்**

1. சிங்கம்
4. குரங்கு
9. மான்
10. யானை
11. ராஜாளி
12. கிளி

**மேலிருந்து கீழ்**

2. கரடி
3. நரி
5. குதிரை
6. மயில்
7. குயில்
8. பூனை
9. மாடு

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 27-11-2002
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 07

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**செல்வி இ.பிரசாளினி**
சாளினி குளிர் ஊற்று,
யோகபுரம்,
மல்லாவி.

*2ஆம் பரிசு -*
**செல்வி சிவாஜினி யோகராசா**
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

*3ஆம் பரிசு -*
**செல்வி மிரிசிஜா விஜயகுமார்**
கொட்டிசுட்டி, வட்டு - தெற்கு,
வட்டுக்கோட்டை.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## உயிர் காத்த கீரி



ஒரு நாள் மகன் அன்னையிடம் பக்கத்து ஊருக்குப் போய்வர அனுமதி கேட்டான். தாய் தனியே போகாமல் "உன் அன்புப் பிராணியையும் அழைத்துச் செல்" என்று கூறினாள். தாய் மகனிடம் வழித்துணைக்குக் கீரியைக் கொடுத்து அனுப்பினாள். மகன் முதலில் மறுத்தான். பின்னர் அதனை எடுத்துக் கொண்டு காட்டு வழியால் போய்க்கொண்டிருந்தான். இரவானதும் அவனுக்கு நித்திரை வந்தது. கீரிப்பிள்ளையைப் பக்கத்தில் விட்டு விட்டு, மரத்தின் கீழ் உறங்கினான். மரத்திலிருந்த இறங்கி வந்த பாம்பு சிறுவனைக் கடிக்க வந்தது. அதைக் கீரி கண்டுவிட்டது. தன் எஜமானனைக் கடிக்கவரும் பாம்புடன் சண்டை போட்டது. சண்டையில் பாம்பு இறந்து விட்டது. சிறுவன் கண்விழித்துப் பார்த்த போது பாம்பு இறந்து கிடப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந் தான். தன் உயிர் காத்த நண்பனான கீரியை நேசித்தான். தன் தாயிடம் சென்று "அம்மா! உங்கள் சொற்படி கேட்டதனால் தான் இப்போது உயிர் தப்பி வந்திருக்கிறேன்" என்று கூறித் தாயை வணங்கினான்.



அருணகிரிநாதன் விபூஷணன்
தரம் - 4D
யா/கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை



## அன்புச் சிறார்களே!

உங்கள் ஆக்கங்களையும் சிறுவர் அரங்கம் பிரசுரிக்கத் தயாராக இருககறது. கதைகள,கடடுரைகள, கவதைகள மறறும ஓவியங்கள் போன்ற உங்கள் படைப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

**வேட்டை வேந்தன்** அங்கம் - 4 தமிழில்- தி.தவபாலன் நன்றி - ரிங்கிள்



## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுபபெயர் :- தூர்மிகா சிவகுமார்
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனக்கலை, கதை, பாட்டு, விளையாட்டு.

முழுப்பெயர்:-
சந்திரகாந்தன் நங்கன்
கற்கும் பாடசாலை :-
யா/ இந்துக் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, கணிதம், முத்திரை சேகரித்தல்.





முழுப்பெயர் :-
சாமந்தி வைகுந்தநாதன்
கற்கும் பாடசாலை :-
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், ஆங்கிலம் படித்தல்.

முழும்பெயர்:-
இராஜமோகன் இந்துஜா
கற்கும் பாடசாலை :-
மானிப்பாய், இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தில், விளையாட்டு.





முழுப்பெயர் :-
சஜீவா சண்முகசுந்தரம்
கற்கும் பாடசாலை :- வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பொது அறிவை வளர்த்தல், வானொலி கேட்டல், கவிதை எழுதுதல்.

# காட்டு ராஜா



காட்டு மிருகங்களின் ராஜா எது என்று கேட்டால், நீங்கள் உடனடியாகவே சிங்கம் என்று பதிலளித்து விடுவீர்கள்! இந்த வாரம் சிங்கம் தொடர்பான சில தகவல்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

காடுகள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களில் வாழும் சிங்கங்கள் சுமார் 12 முதல் 15 வருடங்களுக்கே உயிர்வாழ்கின்றன. ஆனால் மிருகக்காட்சிச்சாலைகளில் வைத்து வளர்க்கப்படும் சிங்கங்கள் 25 வருடங்கள் கூட உயிர் வாழ்கின்றன.

சிங்கங்கள் நம்மைப் போல நாளுக்கு மூன்று தடவை உணவு உண்பதில்லை. மூன்று நாட்களுக்கு ஒரு முறையே சிங்கங்கள் உணவை உண்கின்றன.

உலகத்தில் உள்ள மிகப் பெரிய சோம்பேறிகள் என்று கூட இவற்றைக் கூறலாம். ஆம். நாளொன்றுக்கு 20 மணித்தியாலங்கள் கூட சிங்கங்கள் தூங்குகின்றன.

சிங்கங்கள் தாகத்துக்குத் தண்ணீர் தேடிப் போகத் தேவையில்லை. தான் இரையாக உண்ணும் விலங்குகளின் உடலில் உள்ள இரத்தம் மற்றும் திரவங்களே சிங்கங்களின் தாகத்தைத் தணிக்கப் போதுமானவை.

சிங்கக் குட்டிகளைப் பாதுகாத்து வளர்த்துக் கொள்வது எல்லாமே பெண் சிங்கங்களின் வேலைதான். சிங்கக் குட்டியொன்று தனது மூன்றாவது வயதிலேயே தனித்து வேட்டையாடக் கிளம்பி விடுகின்றது.

எப்படித்தான் பசி வந்தாலும் தன் இனத்தைச் சேர்ந்த குட்டிகளைக் கொன்று தின்னும் பழக்கம் சிங்கங்களிடம் கிடையாது. ஒரு ஆண் சிங்கத்தோடு ஆறு அல்லது ஏழு பெண் சிங்கங்கள் வசிக்கும்.

ஒவ்வொரு ஆண் சிங்கத்திற்கும் குறிப்பிட்ட எல்லைகள் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருக்கும். இதற்குள் வேறு ஏதாவது ஆண் சிங்கங்கள் நுழைந்து விட்டால் அந்தப் பிரதேசமே அதிரும்படியான சண்டை துவங்கி விடும்.

சண்டையில் வெற்றி பெறும் சிங்கம் மற்றதைத் துரத்திவிட்டு தான் அந்த எல்லைக்குள் ஆட்சியை நிறுவிக் கொள்ளும்.

என்ன தான் வீரத்துடன் சிங்கங்கள் போரிடுமாக இருந்தாலும் ஆண் சிங்கங்களுக்கு இரை தேடுவதே அலுப்பான வேலை தான். அநேகமாகப் பெண் சிங்கங்கள் தான் இரையைத் தேடிப் பிடித்து வருகின்றன. ஆண் சிங்கம், குட்டிகள் சாப்பிட்ட மிச்சத்தைத் தான் பெண் சிங்கங்கள் உண்ணுகின்றன.



ஆண் சிங்கங்களுக்குத் தான் அழகான பிடரி மயிர்கள் வளர்ந்திருக்கும். பெண் சிங்கங்கள் புலியைப்போன்ற முகத்தோற்றத்தைக் கொண்டவை.

சிங்கங்கள் பெரும்பாலும் யானையைப் பார்த்தால் அவற்றுடன் வம்புக்குப் போவதில்லை. அந்த இடத்தை விட்டு தானாகவே நழுவி விடும். அதுபோல கூட்டமாகத் திரியும் காட்டு எருமைகளிடமும் சிங்கங்கள் அதிகமாகப் பிரச்சினைக்குப் போவதில்லை.

கதைகளில் சிங்கங்கள் குகைகளில் வாழ்வதாகக் கூறப்பட்டாலும், பெரும்பாலான சிங்கங்கள் குகைகளில் வாழ்வதே இல்லை என்பதுதான் உண்மை.

## MY Self

I am a Girl
My name is Vishnooja.
I am eleven years old
I have a brother and a sister
I am in grade six
I live at Kokuvil.
I go to school by van.
My father's name is Arunakiri nathen.
my mother's name is Ananthamalini.

*by- Vishnooja Arunakirinathen*
*Grade - 6*
*J/ Hindu ladies College.*

## உங்கள் கைவண்ணம்



ஆக்கம்:- சீ.மேரிஜீவனா,
இளவாலை கன்னியர்மடம் வித்தியாலயம்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நாய்க்குட்டி

நாய்க்குட்டி நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
வாலை வாலை ஆட்டி
நன்றி தனைத் தெரிவிப்பாய்
பாலும் மீனும் சாப்பிட்டு
வீடுதனைக் காவல் செய்வாய்
பப்பி பப்பி என்றழைத்தால்
வாலை வாலை ஆட்டிடுவாய்
காலை வேளை எழுந்ததுமே
காலின் கீழே வந்து நிற்பாய்
பந்தைக் கவ்விக் கொண்டு
பாப்பாவுடன் விளையாடுவாய்.

பி.லக்கி, தும்பளை

## இனந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................................
கற்கும் பாடசாலை :..............................................
கற்கும் தரம் :..............................................
வீட்டு முகவரி :..............................................
பிறந்த திகதி :..............................................
ஆர்வமுள்ள துறைகள் :..............................................
:..............................................

................ ..............................
திகதி ஒப்பம்

.......................... ..........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## பொது அறிவு

1. சர்வதேச கல்வித்தினம் வருடத்தில் எப்போது கொண்டாடப்படுகிறது?
   செப்டெம்பர் - 8
2. முட்டைகளை அடைகாக்கும் ஆண் பறவை எது?
   எமு (EMU) (அவுஸ்ரேலியாவில்)
3. ஜனசக்தித் திட்டம் என்றால் என்ன?
   இலங்கையின் வறுமை ஒழிப்புத்திட்டம்
4. மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?
   சிங்கம்
5. உலகிலே 100 வயதைத் தாண்டியவர்கள் அதிகம் வசிக்கும் நாடு எது?
   அசர்பைஜான்
6. நின்றபடியே தூங்கும் உயிரினம் எது?
   குதிரை
7. தமிழ் தட்டச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
   யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்தையா என்பவர்
8. நண்டின் பற்கள் எப்பகுதியில் அமைந்துள்ளன?
   வயிற்றுப்பகுதியில்
9. தோடம்பழத்தின் பிறப்பிடம் எது?
   மலேசியா
10. விழித்துக் கொண்டு தூங்கும் பிராணி எது?
    முதலை

தொகுப்பு- அ.தனுஷா,
தரம் - 9
உரும்புலம், ஆனைக்கோட்டை.

## தெரிந்து கொள்ளுங்கள்

※ - எந்த இடத்திலும் நிற்காமல், நீங்கள் ஒரு மணி நேரம் வரை நடந்தால் நான்கு கிலோ மீற்றர் வரை செல்லலாம். இப்படி நீங்கள் நடக்கும் ஒரு மணி நேரத் தூரமான நான்கு கிலோ மீற்றர் தூரத்தை ஒரு நத்தை தாண்டிச் செல்வதற்கு மூன்று நாட்கள் வரை செல்லும்.

※ - ஒரு நாள் முழுவதும் நீங்கள் ஆடாமல் அசையாமல் கட்டிலிலே படுத்திருங்கள். அப்போதும் நீங்கள் 2.5 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தினைப் பயணம் செய்து கொண்டிருக்கின்றீர்கள். ஆச்சரியமாயிருக்கிறதா? நீங்கள் வாழ்கின்ற பூமி ஒரு மணி நேரத்தில் மேற்படி தூரத்தை சுற்றி வருகிறது. அப்போது பூமியிலுள்ள நீங்களும் அவ்வளவு தூரத்தை சுற்றிவரத்தானே வேண்டும்!

※ - இருநூறு ஆண்டுகளின் முன்னே சைக்கிள் வண்டி கண்டு பிடிக்கப்பட்டது. அந்த முதற் சைக்கிளுக்கு பெடல் இருக்கவில்லை. சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கால்களால் தரையில் உதைத்தே அந்த சைக்கிளை அப்போது ஓடச் செய்தனர்.

※ - ஆகாயத்திலே முதன்முதலில் பலூன்கள் பறக்கவிடப்பட்டன. இப்படிப் பறந்த பலூனில் முதன் முதல் பயணம் செய்தவர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு சேவல், வாத்து, செம்மறி யாடு ஆகியவையே அந்தப் பிரயாணிகள். 1983ஆம் ஆண்டு 8 நிமிஷங்கள் வரை பலூனிலே இவை பறந்தன!

※ - இன்றைக்கு விமானத் தபால் என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒன்றாகிவிட்டது. ஆனால் முதல் விமானத் தபால் எவ்விதம் விநியோகிக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா? முதல் விமானத் தபால் பெரிய பலூன் ஒன்றிலேயே எடுத்துச்செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டது!

※ - உலகின் பெரிய பெற்றோல் விற்பனை நிலையம் சவுதி அரேபியாவிலுள்ள செடா என்னும் இடத்திலே உள்ளது. இந்த நிலையத்தில் எல்லாமாக 200 பெற்றோல் அடிக்கும் இயந்திரங்கள் உள்ளன!

※ - உலகில் மிகவும் நீண்ட சைக்கிள் வண்டி பெல்ஜியத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 35 பேர்கள் உட்காரத்தக்க தனித்தனி இருக்கை வசதியும், மிதிக்கத் தேவையான பெடல்களும் பொருத்தப்பட்டுள்ளன.

※ - உலகின் பெற்றோல் இயந்திரம் பொருத்தப்பட்ட முதன் முதல் மோட்டார் சைக்கிள் 1885 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. இதன் பெரும்பாலான பகுதி மரத்திலேயே குடைந்து செய்யப்பட்டது. இந்த மரமோட்டார் சைக்கிள் 1903 ஆம் ஆண்டில் தீக்கிரையாக்கப்பட்டு அழிந்து போயிற்று!

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஆபத்துக்கள் எப்போதும் நேரடியாகவே வர மாட்டாது -நெப்போலியன

# நமது நோக்கு

## தெற்கிலிருந்து எழும் எச்சரிக்கைகள்!

தென்னிலங்கையில் சமாதானத்துக்கு எதிரான சக்திகள் மீண்டும் தம்மைப் பலப்படுத்தும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளன.

குறிப்பாக-என்றுமே இனவாதத்தை வளர்ப்பதென கங்கணம் கட்டி நிற்கும் ஜே.வி.பி, ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக மாணவனின் படுகொலையுடன் எதிர்ப்புக்களை சந்தித்து வரும் நிலையில்-புதியதொரு வியூகத்துடன் அரசியல் நடாத்தத் தயாராகி வருகின்றது.

மூன்று முனைகளினூடாகத் தயாராகும் இத்திட்டம்-அமைதி முயற்சிகளையும், தமிழர்களையும் குறி வைத்துத் தாக்கும் நோக்கினைக் கொண்டிருப்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகின்றது.

முதலாவதுமுனை-வெளிநாடுகளில் வசிக்கும் சிங்கள மக்களை மையப்படுத்துகின்றது.

அமைதி முயற்சிகளில் சர்வதேசம் காட்டி வரும் ஆதரவும், விடுதலைப்புலிகளுக்கான அங்கீகாரமும் தொடர்பான கடுமையான எதிர்ப்பினை, வெளிநாடுகளிலுள்ள சிங்கள மக்களைக் கொண்டு வெளிக்காட்டுவதற்கு ஜே.வி.பி. செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இதற்கான பெருமெடுப்பிலான பிரசாரத்தில்-ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, லண்டனிலுள்ள ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆகியோர் இறங்கியுள்ளனர்.

இலங்கை தொடர்பான சர்வதேச மாநாடுகளில், கருத்தரங்குகள் நடைபெறும் இடங்களில், சிங்கள மக்களைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களை நடாத்தவும் ஜே.வி.பி. முயலுவதாகத் தெரிகின்றது.

இதன் மூலம் சர்வதேச அரங்கில் சலசலப்புக்களை ஏற்படுத்த முனையும் ஜே.வி.பி, மறுபுறம்-

தென்னிலங்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து, முன்னையதைவிட நெருக்கமான வகையில் இயங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த வகையில் இரண்டு தரப்பும் ஒரே வேலைத் திட்டமொன்றின் கீழ் பணி புரியவும் தீர்மானித்துள்ளன. இந்தப் பொதுச் சேவைத் திட்டம் விரைவில் பொ.ஐ.முவின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பகிரங்கமாக அறிவிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே -சமாதான முயற்சிகள் மற்றும் நோர்வேயின் பங்களிப்புப் பற்றியதுமான பொதுஜன ஐக்கிய முன்னணியின் அண்மைக்காலக் காட்டமான அறிக்கைகளுக்கும், சாடல்களுக்கும் பின்னணியில் ஜே.வி.பியும் முக்கியமான பங்கு வகித்ததான உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில்-

தெற்கில் பரபரப்பான அரசியலை நடாத்த இரண்டு தரப்பும் இணைந்து - மீண்டும் சமாதான முயற்சிகளையும் தமிழர்களையும் தமக்கான 'சர்ச்சைக்குரிய விடயமாக' - சிங்கள மக்களிடம் கொண்டு செல்லவே எத்தனிக்கும் என்பது தெளிவானது.

இதேவேளை-ஜே.வி.பியின் மூன்றாவது முனை-மிகவும் அபாயகரமானதாக அமைந்து விடவுள்ளது.

- தெற்கில் வன்செயல்களைத் தூண்டுவதற்காக-ஜே.வி.பி. -மீண்டும் ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபடுவதான செய்தியானது, இலங்கைத் தீவில் ஏற்பட்டுவரும் அமைதிச் சூழலை, சின்னாபின்னமாக்கும் ஒரு முயற்சியே என்பது சந்தேகமற்றதாகும்.

தெற்கில் எழுந்துள்ள மாணவர் அமைதியின்மையையும், வேலை வாய்ப்புக்களற்ற சூழலையும் சாதகமாகக் கொண்டு - சிங்கள பௌத்த பேரினவாதத்தையும் துணையாக்கி - மீண்டும் தொடர் வன்முறைகளை உருவாக்கவும் ,

அதன் மூலமாக சமாதான முயற்சிகளை குழப்புவதற்கும் ஜே.வி.பி. முயலக்கூடும்.

தெற்கிலிருந்து ஏற்பட்டு வரும் இந்த அபாயங்கள் புறக்கணிக்கப்படக்கூடியவையல்ல என்பதைக் கடந்த கால வரலாறு எடுத்துக்காட்டுகின்றது.

தமிழர்களுக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுத் தரக்கூடிய எந்த முயற்சியையும் இடைநிறுத்துவதற்கும் குழப்புவதற்கும், ஜே.வி.பி. போன்ற சக்திகள் முயன்றே வந்துள்ளன என்ற வரலாற்று உண்மையை மனதில் கொண்டு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது எமது கடமையாகும்.

---

**மட்டக்களப்பு**

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் முதன் முறையாக மாவீரர் நாள்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முறையாக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மாவீரர் தின நிகழ்வுகள் இம்முறை இடம்பெறவுள்ளன.

மட்டக்களப்பு அரசடி மகாஜனக் கல்லூரியில் 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை 4000 மாவீரர்களின் திருவுரு வப்படங்கள் அஞ்சலிக்கும், அகவணக்கத்திற்குமாக, விசேடமாக அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் வைக்கப்படவுள்ளன. 25ஆம் திகதி காலை 8.00 மணி முதல் இந் நினைவாலயம் இருபத்துநான்கு மணிநேரம் மக்களின் அஞ்சலிக்காக திறந்திருப்பதுடன் விசேடமான போக்குவரத்து ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு தேசியத் தலைவர் வே.பிரபாகரனது மாவீரர்தின உரை மகாஜனாக் கல்லூரியிலுள்ள மாவீரர் நினைவாலயத்தில் நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளது. தமிழீழ இசைக்குழுவினரது இசை நிகழ்ச்சி 27ஆம் திகதி இரவு கோட்டைமுனை இந்துக் கல்லூரியில் விசேட நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (06)

## ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கு மந்திகையில் வாள் வெட்டு!

(வடமராட்சி)

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத குழுவினர் உறுப்பினரையும் அவரது மனைவியையும் தாக்கியதுடன் வாள்களால் வெட்டிக் காயப்படுத்தியுமுள்ளனர்.

காயமடைந்த மேற்படி இருவரும் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11 மணியளவில், மந்திகை புலோலி வடமேற்கில் அமைந்துள்ள வீட்டில் தங்கியிருந்த வேளை, வீட்டினுள் நுழைந்த 10 இற்கு மேற்பட்ட இனந்தெரியாதோர் கணவனைத் தாக்கியபோது, கணவனை காப்பாற்ற முற்பட்ட மனைவியையும் தாக்கியதுடன் வாள்களால் அவர்களைத் தாக்கியோர் வெட்டினர்.

சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அயலவர்கள் ஓடிவந்தபோது, தாக்குதல் நடத்தியோர் வீட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினரான இராஜரட்ணம் சத்தியேந்திரா- அரபாத் (வயது 33), அவரது மனைவியான சத்தியேந்திரா மீனாம்பிகை (வயது 33) ஆகிய இருவரும் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக காயமடைந்த இருவரையும் மருத்துவமனைக்கு சென்று பார்வையிட்ட பருத்தித்துறை பொலிசார் அவர்களது வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

## இத்தாலி செல்ல முயன்ற 59 பேர் காலியில் கைது

(கொழும்பு நிருபர்)

சட்ட விரோதமாக இத்தாலிக்குச் செல்வதற்கு முயன்ற 59 பேரை காலி - அஹுண்டற பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை சட்டவிரோதமாக மீன்பிடிப்படகு மூலம் இவர்கள் இத்தாலி செல்வதற்குத் தயாராக இருந்த போதே இவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவர்கள்- கொழும்பு, கண்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் ஒவ்வொருவரும் தலா 3 லட்சம் ரூபாவை பயணத்திற்காக முகவரிடம் கொடுத்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதான 59 பேரையும் மாத்தறை நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்துள்ளனர்.

# திலக் மாரப்பன பலாலிக்கு வந்த விமானத்தில் ஒலித்த அபாய மணி !

## பரபரப்புடன் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது

(கொழும்பு நிருபர்)

பலாலியில் நடைபெற்ற உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டுக்கு பாதுகாப்பு அமைச்சர் மற்றும் உயர் படை அதிகாரிகள் சென்று கொண்டிருந்த போது விமானத்தில் எழுந்த அபாய எச்சரிக்கை மணியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான உயர் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று இரத்மலானையிலிருந்து அன்ரனோவ் விமானம் மூலம் பலாலிக்கு புறப்பட்டுச் சென்றது.

பலாலியில் விமானம் இறங்குவதற்கு 15 நிமிடங்களே இருந்தபோது திடீரென அபாயமணி ஒலித்தது. இது விமானத்தில் தீ ஏற்படும் போது ஒலிக்கும் மணியாகும். இதையடுத்து விமானி அனைவரையும் பரசூட் அணிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தியதுடன் விரைவாக விமானத்தை தரையிறக்க நடவடிக்கை எடுத்தார்.

பத்திரமாக விமானம் பலாலியில் தரையிறங்கிய பின்னரே, தீ ஏற்படவில்லை என்றும், தொழிநுட்பக் கோளாறினால் தான் அபாய மணி ஒலித்தது என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

பலாலியில் நடந்த கலந்துரையாடலை முடித்துக் கொண்ட பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழு பின்னர் அன்று மாலை வேறொரு விமானம் மூலம் கொழும்பு திரும்பியது.

**-இக்பால் அத்தாஸ் வீடு மீதான தாக்குதல்-**

## தண்டனை விதிக்கப்பட்ட வான்படை அதிகாரிகளுக்குப் பிணை

(கொழும்பு நிருபர்)

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்பு விவகார ஆய்வாளரான இக்பால் அத்தாஸ் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு, நீதிமன்றத்தால் 9 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இரு விமானப் படை அதிகாரிகளையும் மேன் முறையீட்டு நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக, மேன்முறையீடு செய்துள்ள இவர்களை, தலா ஐம்பதாயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

## யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானி கற்கை நெறி!

(நமது நிருபர்)

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் 2002 /2003 கல்வியாண்டில் சட்டமானி கற்கை நெறியைத் தொடர அனுமதி கிடைத்தோருக்கான பதிவு செய்யும் நிகழ்வு - நேற்றுக் காலை யாழ்.திறந்த பல்கலைக்கழகப் பிராந்தியப் பணிப்பாளர் ஞானேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கற்கைநெறிகளை இங்கு ஆரம்பித்து வைப்பதற்காக-கொழும்பிலிருந்து வருகை தந்த - சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ரோகண ரட்னாயக்க, அசோக சில்வா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

87 ஆம் ஆண்டுக்குப் பின்னர், முதன் முதலாக இக்கற்கைநெறி இந்த ஆண்டே இங்கு ஆரம்பிக்கப்படுகிறது எனவும், இவர்களுக்கான பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும் எனவும், யாழ்.பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதேவேளை- பல மாணவர்களது வேண்டுகோளுக்கு இணங்க மாத்தளை, கண்டி போன்ற இடங்களில் பரீட்சை நிலையங்களை அமைத்து பரீட்சை நடத்துவது போல யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நிலையத்தை அமைத்து இங்கேயே பரீட்சை நடத்தும் படியும் யாழ்.திறந்த பல்கலைக்கழக நிர்வாகத்தினர் நிகழ்வு நடந்தபோது கோரிக்கை விடுத்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு முடிவுகளை அறிவிப்பதாக கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள் அதற்குப் பதிலளித்தனர்.



## குறைதீர் மன்றம்

எமது கிராமமாகிய தெல்லிப்பளையில், மகாதனை துர்க்காபுரம் பகுதிக்கு இன்னமும் மின் இணைப்பு செய்யப்படவில்லை. இதனால் சுமார் 300 குடும்பங்கள் மிகவும் மன வேதனையுடன் இருக்கிறார்கள். இவ்விடயத்தை தங்கள் குறைதீர் மன்றத்தின் மூலம் வெளிப்படுத்தி, உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எப்போது எமக்கு மின் இணைப்பு வேலை தொடங்கப்படும் என்பதனை அறியத்தருவீர்களா?

அண்ணா சனசமூக நிலையம்
மகாதனை,
தெல்லிப்பளை.

நமது ஈழநாடு

உங்கள் கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்குவது தொடர்பாக, நமது ஈழநாடு மின்சாரசபையின் வடபிராந்தியப் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டபோது டிசெம்பர் 31 இற்கு முன்னர் மின் இணைப்பு வழங்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

# ஈராக் விவகாரத்தில் புதிய சகாப்தத்தை உருவாக்குவது அமெரிக்காவா?, ஐ.நாவா?

ஈராக் விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்கா தனது போர்த் திட்டத்தைக் கைவிடாது தீவிரப்படுத்துவதற்கான ஆயத்தங்களை தயார்படுத்திக் கொண்டே வருகின்றது. ஈராக்கின் அணுகுமுறையில் மாற்றம் நிகழ்ந்த பின்பும் அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் போர்த்திட்டத்தை கைவிடாத போக்கும் சர்வதேச அரசியலல் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் முயற்சியாகவும் அமைந்துள்ளது


ஜோர்ஜ் புஷ்

போல் தெரிகிறது. அடிப்படையில் ஆயுதங்களற்ற ஈராக்கினை, எதிர்கால சவால்களுக்கு முட்டுக்கட்டையில்லாத ஈராக்கை உருவாக்க அமெரிக்கா திட்டமிடுகின்றது என்பதே தற்போதைய போக்காகும். ஆனால் ஈராக் தொடர்பான சர்ச்சை, ஐக்கிய நாடுகள் சபைக்கு கிடைத்துள்ள புதிய உந்துசக்தியாகும். அது ஐ.நாவின் செயலாளரான கோபி அனானின் ஆளுமையைப் பொறுத்ததாகவே அமைந்துள்ளது. அதனை ஐ.நா. சபை சரிவரக் கையாளுமா? என்பதே தற்போதைய கேள்வியாகும். எனவே இவ்வாரம் அமெரிக்காவின் புதிய அணுகுமுறையையும், ஐ.நாவிற்கு கிடைத்துள்ள புதிய சகாப்தத்தினையும் பரிசீலிப்போம்.

### படைப்பலம்

| | ஈராக் | அமெரிக்கா |
|---|---|---|
| இராணுவம் | 424,000 | 485,536 |
| பிரத்தியேக பாவனைக்கான இராணுவம் | 650,000 | 865,200 |
| கடற்பயிற்சி பெற்ற பட்டாளம் | ... | 173,385 |
| கடற்படை | 2,000 | 384,576 |
| விமானப்படை | 30,000 | 369,721 |
| விமான எதிர்ப்புப்படை | 17,000 | ... |
| பரா இராணுவம் | 44,000 | ... |
| கரையோரப் பாதுகாப்புப்படை | ... | 37,166 |

படைப் பலத்தைப் போன்று ஆயுத பலத்தையும் ஒப்பீட்டடிப்படையில் நோக்க முடியாதுள்ளது. ஏனெனில், அமெரிக்காவின் முழு ஆயுத பலத்தின் விபரமும் கிடைக்கவில்லை. அதனால் ஈராக்கின் ஆயுத பலத்தை மட்டுமே நோக்குவோம்.

| | |
|---|---|
| தாக்குதல் கவச வாகனங்கள் | 2,200 |
| சாதாரண கவச வாகனங்கள் | 3,700 |
| பிரதான ஏவுகணைகள் | 2,400 |
| போர் புரியும் விமானங்கள் | 300 |

**புதிய அத்தியாயம்.**

அமெரிக்க காங்கிரஸ் அவைக்கான தேர்தலில் குடியரசுக்கட்சி அமோக வெற்றியை அடைந்துள்ளது. வில்லியம் புஷ்ஷின் சகோதரன் ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதும், செனற்றிலும், பிரதிநிதிகள் சபையிலும் குடியரசுக்கட்சி பெரும்பான்மை பெற்றிருப்பதும் புஷ்ஷின் வெளிநாட்டுக் கொள்கைக்கு கிடைத்த ஆதரவாகவே அமைந்துள்ளது. குறிப்பாக ஈராக் மீதான போர்ப் பிரகடனத்திற்கு கிடைத்த வெற்றியாகவே அமெரிக்க மற்றும் பிரித்தானிய ஊடகங்கள் பிரஸ்தாபித்தன. அதனை அடிப்படையாகக் கொண்டு போர் வெறியுடன் அடிக்கடி எச்சரிக்கையையும் தயார்ப்படுத்தல்களையும் தீவிரப்படுத்தும் வில்லியம் புஷ், அதனை ஓர் அணுகுமுறையாகக் கையாளத் தொடங்கி விட்டார் போல உள்ளது.

ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் ஈராக்குக்குள் அனுப்புவது தொடர்பான ஐ.நாவின் தீர்மானத்தை ஈராக்கை ஆளும் சட்டசபை நிராகரித்தபோது, வில்லியம் புஷ் இரண்டாவது நிலையில் போர்த்திட்ட அணுகுமுறையை தயார்ப்படுத்தினார். முதலாவது தயார்ப்படுத்தலை ரஷ்யா, பிரான்ஸ், சீனா போன்றவற்றுக்கு எதிராகப் பயன்படுத்தி எச்சரிக்கை கலந்த தொனியில் வெளிப்படுத்தினார். அது தோற்றுப் போகவே அதாவது, ஈராக் மீதான நேரடிப் போருக்கான புஷ்ஷின் விருப்பம் தோற்றுப் போகவே ஈராக் மக்களையும், சதாம ஹுசைனையும் தாக்கத் தொடங்கியுள்ளார். இது ஒருவகையான ராஜதந்திரமாகவே தெரிகின்றது. இரண்டாவது நிலையிலான போர்த் திட்டமானது கிழக்காசியாவின் தளங்களையும், போர்க்கப்பல்களையும் ஈராக் மீதான போருக்குத் தயார்படுத்துவது போன்ற ஏற்பாடுகளையும் உருவாக்கினார். குறிப்பாக சதாம் ஹுசைனின் ஆளும் சட்டசபை ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்தபோது ஈராக்கை மிரட்டுவதற்கான ஏற்பாடாக புஷ் அதனை மேற்கொண்டார். சதாம் ஹுசைனும் அதனை ஒரு பரிசோதனையாகவே மேற்கொண்டிருந்தார். ஆளும் சட்டசபை நிராகரிக்கும்போது அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளதும் அணுகுமுறை எவ்வாறாக அமையுமெனப் பரிசோதித்து பார்த்தார். அப்பரிசோதனைக்கு பதில் கொடுத்த புஷ், போர் தவிர்க்க முடியாதது என்பதை வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் பயிற்சித்திட்டங்களையும் உடனுக்குடன் ஏற்படுத்தியதுடன், போர்வீரர்களை உற்சாகப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டார். அதற்கு மாற்று நடவடிக்கையாக சதாம் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதாக நேரடியாக அறிவிக்காதபோதும், ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக பதிலளித்திருந்தார்.

மூன்றாவது நிலை விதிக்கப்பட்ட 30 நாட்கள் இடைவெளியில், ஈராக் தனது ஆயுத விபரம் முழுவதனையும் ஒப்படைக்க வேண்டும் என்பதற்கான அறிவிப்பு வெளிவந்தபோது, ஈராக்கில் ஏற்பட்ட உணாவலைகளைக் கருத்திற்கொண்ட புஷ், நேட்டோவின் மாநாட்டிலும், செக் குடியரசு அதிபருடன் கலந்துரையாடும்போதும், ஈராக் மீதான போர்த் திட்டத்தைப் பற்றியே முதன்மைப்படுத்தி வருகின்றார். அதுமட்டுமல்லாது, ஏற்கனவே பிரித்தானிய இராணுவ உதவிகளைப் பெறுவதறகான முறைப்படி அழைப்பினை புஷ்


பயமுறுத்துகின்றதா அமெரிக்கா?

வழங்கியிருந்ததுடன், துருக்கியை தற்போது அணுகிப் படையுதவியை கோர இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது மூன்றாவது நிலை எச்சரிக்கையும், மிரட்டலுமாகும். மேலும், ஈராக் மீது போர் தொடுக்குமபோது நேட்டோப் படைகளின் உதவியும் நாடப்படுமெனவும் அதற்கு நேட்டோ நாடுகள் தயாராக வேண்டுமெனவும் வில்லியம் புஷ் குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோ அமைப்பில் மேலும் ஏழு கிழக்கு ஐரோப்பிய நாடுகளை இணைப்பது தொடர்பான ஆலோசனை நிகழ்வதாகவும் குறிப்பிட்ட புஷ், ரஷ்யா- அமெரிக்காவின் எதிரி அல்ல என்றும் பயங்கரவாதமே தமது எதிரி என்றும் குறிப்பிட்டதனூடாக, ரஷ்யாவை மறைமுகமாக புஷ் தனது எதிரி எனச் சுட்டிக் காட்டிவிட்டார். இதனாலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளை நேட்டோவில் இணைத்துக்கொள்ள முயன்று வருவதுடன், ஈராக்கை ஆதரித்த ரஷ்யாவைத் தனிமைப்படுத்தும் போக்கையும் புஷ் இதன் மூலம் கையாளத் தொடங்கியுள்ளார். அதாவது, ஈராக்கிற்கு எதிராக உலகம் முழுவதுமுள்ள பல நாடுகளை தயார்படுத்துவதன் மூலம், ஈராக்கையும் அதன் ஆதரவாளர்களையும் சரணடைய வைக்கும் ராஜதந்திரத்தினை புஷ் கையாண்டு வருகின்றார்.

வில்லியம் புஷ் பதவிக்கு வந்ததிலிருந்து இன்றுவரை ஈராக் மீது போர் தொடுப்பதனை ஒரு ராஜதந்திரமாகப் பயன்படுத்தி வருகின்றார் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். போரையும் அதற்கான நேரடி விளைவுகளையும் ஏற்படுத்த முயன்ற புஷ், அது தோற்றுப்போக அதனை ராஜதந்திரமாக மாற்றி ஈராக்கினையும், அதன் கூட்டாளிகளையும் அடிபணிய வைக்கத் திட்டமிட்டு வருகின்றார். இது ஆரம்பகாலப் போர் முறையாக அமைநதபோது, பனிப்போர்க் காலப்பகுதியில் இரண்டு வல்லரசுகளுமே மாறி, மாறிப் பயன்படுத்தி வந்த ராஜதந்திர அணுகுமுறைதான். இதனை **Gun boat diplomacy** என அழைப்பதுண்டு. போருக்குரிய தயார்படுத்தல் அமோகமாக நடைபெறும். ஆனால், போர் நிகழாது. அதேநேரம், தயார்ப்படுத்தலைக் கண்டு எதிரிநாடு அடிபணியும் நிலைக்கு வந்துவிடும். ஆனால் சதாம் ஹுசைன் அடிபணிவதை விடுத்து வெற்றிகரமாகப் பின்வாங்க முயற்சிப்பதே நன்று. அத்தகைய பின்வாங்கல் புஷ்ஷின் அடுதத கட்ட நகர்வுக்கு இடைஞ்சலாக அமைவதுடன் - ஈரான், வடகொரியா, சூடான் மற்றும் அமெரிக்க எதிர்ப்பினைக் கொண்ட அரசுகளின் அரசியலுக்கு சாதகமான சமிக்ஞையாகவும் அமையும். சில சந்தர்ப்பங்களில் **Gun boat diplomacy** தோற்றுப் போகுமாயின், போர் தவிர்க்க முடியாததாக மாறிவிடுமென **Washington post** குறிப்பிடுகின்றது. அவ்வாறு போர் ஒன்று மூளுமாயின், ஈராக்கிய படைப்பலம் தாக்குப்பிடிக்குமா(?) என்பதை நோக்குவதைவிட அதன் அளவை நோக்குவது மட்டுமே உணரப்படக்கூடிய தற்போதைய அம்சமாகும்.

இவை மேற்கு நாடுகளில் தகவல்களாக அமைந்திருப்பதனை குறிப்பிடுவத்துடன்- உயிரியல், இரசாயன, அணுவாயுத நிலையங்கள் பலவற்றை ஈராக் கொண்டிருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகின்றது. ஈராக்குக்குள் 15 நிலையங்களில் அணுவாயுத உற்பத்திகள உள்ளதாகவும், 04 நிலையங்களில் உயிரியல் மற்றும் 08 நிலையங்களில் இரசாயன ஆயுதங்களை தயாரிப்பதாகவும் மேற்கு ஊடகங்கள் குற்றஞ் சாட்டுகின்றன.

**ஐ.நா.க்கு உந்துசக்தி**

ஐ.நா.சபையின் பாதுகாப்புப் பிரிவு ஈராக் தொடர்பாக நிறை வேற்றியுள்ள 1441ஆவது தீர்வுத் திட்டம் ஐ.நா.சபைக்கு உந்து சக்தியை வழங்கியுள்ளது எனக கூறலாம். பனிப்போர் முடிந்த பின்பு நிகழ்ந்த பல நடவடிக்கைகளில் ஐ.நா.சபை பொம்மையாகச் செயற்பட்டு வந்துள்ளதுடன் அமெரிக்காவின் விருப்பத்தினை நிறைவேறறுகின்ற சபையாகவும் காணப்பட்டுள்ளது. ஆனால் தற் போது ஏற்பட்டுள்ள தீர்மானம் ஐ.நா.வின் பங்கினை உணர்த்தியிருப்பதுடன் பாதுகாப்புச் சபையில் உள்ள ஐந்து நாடுகளது தீர்மானமாக அமைந்துள்ளது. இதனால் முன்னோக்கிய நிலைய்ய அடைந்துள்ள ஐ.நா. சபையின் அடுத்த கட்டச் செயற்பாட்டிலேயே அதன் பலமும், உறுதியும் தங்கியுள்ளது. வெறுமனே போரைத் தவிர்த்திருக்கின்றோம் என்ற மார்தட்டலை விடுத்து தீர்க்கமானதும் நேர்த்தியானதுமான பரிசோதனை முடிவுகளை எடுக்க வேண்டிய பொறுப்பு கண்காணிப்பாளர்களிடம் உள்ளது. அவர்கள் தீர்மானத்தை சரிவர எடுப்பது என்பதைக் காட்டிலும், அமெரிக்க நலனுக்கு இசைபவர்களா? என்பதும் ஐ.நா.வின் பங்கினை உணர்த்த வல்லது. எனவே, ஈராக் விடயத்தில் ஆயுதக் கண்காணிப்பாளர்களை அடிப்படையாக கொண்டே அடுத்த கட்டப்பணி தங்கியுள்ளது.


அமெரிக்காவுக்கு எதிராக லண்டனில் நடந்த போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஆனால் ஈராக்கின் தென்பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக ஈராக்கின் விமானங்கள் பறப்பதற்கு தடை என்பதும், தற்போதும் அப்பகுதியில் அமெரிக்க - பிரிட்டன் விமானங்கள் தாக்குதலை நிகழ்த்துகின்றன என்பதும் ஐ.நா.வின் கவனத்திற்குரிய விடயம். ஐ.நா.சபை உலகிலுள்ள அரசுகளின் இறைமையையும், சுயநிர்ணயத்தையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே அன்றி, அரசுகளின் இறைமைகளை பறிப்பதற்கான நடவடிக்கைக்கு துணை போவதற்காக உருவாக்கப்படவில்லை. அதாவது, ஈராக்- குவைத்தின் இறைமையை மீறியது என்பது தவறான முன்னுதாரணம்தான். ஆனால், அதற்காக ஈராக்கின் இறைமையை மீறுவது பதில் நடவடிக்கை என்றால், உலகில் இறைமைக் கோட்பாட்டுக்கும், சுய ஆதிபத்தியத்திற்கும் அர்த்தமற்றதாகிப் போய்விடும். இவற்றைப் பேணுவதும், பாதுகாப்பதும், ஐ.நா.சபையின் - கடமைக் கூறுகளில் ஒன்றாகவுள்ளது. அதனைச் சரிவரக் கையாளும் பொறுப்பு, செயலாளர் கோபி அனானுக்குரியது. அவரது ஆளுமையின் பலத்தினால் ஈராக் மட்டுமல்ல, அனைத்து உலக நாடுகளது இறைமைக்கும், சுயாதிபத்தியத்திற்கும் பாதுகாப்பு அளிக்கலாம். அத்தகைய கடமைப்பாட்டை ஐ.நா.வினூடாக அனான் ஏற்படுத்துவாராயின், வரலாற்றில் அவரது அணுகுமுறை ஐ.நா.சபைக்கு உந்துசக்தியாக அமையும்.

ஈராக் மீதான ஐ.நா.கண்காணிப்புக் குழுவின் பரிசோதனையின்படி- உயிரியல், இரசாயன மற்றும் அணுவாயுதங்களை உற்பத்தி செய்தது எனக் கண்டறியப்பட்டால் - அதன் மீது போர் தொடுப்பதோ, சதாமை ஆட்சியிலிருந்து அகற்றுவதோ, அல்லது ஈராக்கை அழிப்பதோ தீர்வாகாது. மாறாக, ஐ.நாவின் பிரமாணங்களுக்கு அமைவான தீவினை வழங்குவதுடன், உலகத்திலிருந்து அத்தகைய களைவை எல்லா நாடுகள் மீதும் ஐ.நா.சபை மேற்கொள்ளுதல் வேண்டும். அதுவே, எதிர்கால உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதமாக அமையும். அமெரிக்கா கூறுவதுபோல், தன்னிச்சையாக ஈராக்கிடமிருந்து ஆயுதங்களைக் களைவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாததும், நியாயப்பாடற்றதுமான முடிவாகும். ஏனெனில் ஈராக்கினைவிட மோசமான அழிவுகளையும் உரிமை மீறல்களையும் கடந்த காலத்தில் மேற்கொண்ட அரசுதான் அமெரிக்கா. ஏன், தற்போதும் அதனைத்தான் அமெரிக்கா செய்துவருகின்றது. வியட்னாமிற்கு இணையாகவே ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா தனது நலன் சார்ந்த அரசியலை மேற்கொண்டு வருகின்றது.

**கே.ரி.கணேசலிங்கம்**

ஐரோப்பிய பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிடுவது போன்று, அமெரிக்காவுக்கும் அதன் ஆட்சியாளர்களுக்கும் போர் ஒன்று அவசியமானதாக உள்ளது. அமெரிக்காவின் எதிர்கால அரசியல் நலனையும், பொருளாதார வாய்ப்புக்களையும் வென்றெடுப்பதுடன், முழு உலகத்திலும் ஆதிக்கம் செலுத்தப் போர் அவசியமானதாக உள்ளது. அத்தகைய போரைத் தவிர்த்து உலகத்தைச் சரியான திசைக்கு இட்டுச்செல்லும் பலம் ஐ.நாவுக்கு கிடைத்துள்ளது. அதனை ஐ.நா. சரியாகப் பயன்படுத்துமாயின், ஈராக்குக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே பாதுகாப்பானது. அதன் பங்கை உணர்ந்து கொள்ளும் நிலை ஐ.நாவுக்கும் அதன் அங்கத்துவ நாடுகளுக்கும் உரியது. அதனை உணரத் தவறுமாயின் அமெரிக்கா தனது புதிய பாணியில் எதிர்கால மாறுதல்களை உருவாக்கிக் கொள்வதுடன், அமெரிக்காவின் எதிரிகள் விரைவில் அமெரிக்காவிடமே சரணடைந்தும் விடுவார்கள். அத்தகைய உலகம் சமநிலையற்ற அருவருப்பான, ஆபத்துமிக்க, ஏமாற்றுத்தனத்தை அதிகம் கொண்டதாக அமையும். அவற்றைத் தவிர்க்க முடியாததாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையே ஏற்படும்.

# யாழ்.சமுர்த்தி வங்கிகளுக்கு தெரிவான வங்கியாளர்கள்!

(நமது நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கவுள்ள சமுர்த்தி வங்கிகளுக்கு - வங்கியாளர்களை நியமிக்கும் பொருட்டு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையிலிருந்து பிரதேச செயலகங்கள் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியல் வெளியாகியுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் பிரிவிலிருந்து- எஸ்.சிறிகாந்தன், எஸ்.ஜெயகணேசன், ஜீ.சித்திரகுமார், எஸ்.சண்முகப்பிரியா, பீ.வினிதா, ஏ.சிறிஜெகன், எம்.காயத்திரி, ரீ.கருணாகரன் ஆகியோரும்,

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலிருந்து- ஆர். குகதாஸன், எஸ்.சுகந்தன், ஆர்.தர்மிலா, ரீ.ராமநாதன், ஏ.அகிலன் ஆகியோரும்,

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலிருந்து- எஸ்.பானுமதி, ரீ.இந்திரகலா, பி.விஜயகுமாரன், என்.நளினி, எஸ்.சொரூபநந்தன், எஸ். ஜோர்ஜ் தர்சினி, பீ.பாமினி, ஆர்.நளினி ஆகியோரும்,

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலிருந்து- எஸ்.சிறிகிருஷ்ணன், கே.பிரபாகரன், எம்.பார்வதி, என்.ஜெகதீஸ்வரன், ரீ.இராஜேஸ்வரி, கே. சிறீதரன், வீ.குருபரன், எஸ்.வில்சன் ஜெரின் ஆகியோரும்,

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலிருந்து- பீ.யசோதா, கே.பபிரஞ்சனா, ஏ.சுகந்தி, எஸ்.மதியழகன், கே.சுதர்சினி ஆகியோரும்,

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலிருந்து - எஸ்.ஞானமுரளி, ஜீ.சுஜிதா, என்.சௌந்தரராஜா, பி. பாலசுப்பிரமணியம், ரி.சுமேதா ஆகியோரும்,

வேலணை பிரதேச செயலர் பிரிவிலிருந்து - கே.பிரேமளாதேவி, கே.பஞ்சலிங்கம், கே.பிரபாகரன், யூ.சுஜித்திரா, கே.விஜேந்திரன், வீ.முரளிதாஸ், எஸ்.சாரதாதேவி, ஆர்.ரட்ணபாலன் ஆகியோரும்,

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிலிருந்து- ஜே.சிவாஜினி, எம்.ஜெயந்தி, ஏ.யூலியட் சுகந்தினி, ஈ.பரமேஸ்வரி, மீ.சதீஸ்வரன், எஸ்.சுகன்ஜா ஆகியோரும்,

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து- பீ.ராஜினி, ஆர்.விஜிகுலமணி, வீ.கீதாஞ்சலி, கே.வேதநம்பி, ஏ.ரமணன், ரீ.பாலச்சந்திரன் ஆகியோரும்,

உடுவில் பிரதேச செயலர் பிரிவிலிருந்து- ஆர். கஜேந்திரன், ரீ.சுதா, எம்.கேதீஸ்வரன், எஸ்.தமிழ்ச்செல்வி, எஸ்.சுகந்தன், பீ.கலைமதி, எஸ்.சுகன்ஜா ஆகியோரும்,

சங்கானை பிரதேச செயலர் பிரிவிலிருந்து- கே.உமேஷ், எஸ்.ஜெயபிரகாஷ், வீ.சுரேந்திரன், ரீ.வடிவேல், ரீ.மைசூர்மதன், ரீ.ரஞ்சன் ஆகியோரும்,

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து- ஜே.எஸ்.நிக்சன், டபிள்யூ.பியந்தன், கே.கவிதா, டி.எஸ்.ஜெயக்குமார், ரீ.ரஜித்தா, எஸ்.ஜெயராஜ் ரீ.பாலமுரளி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் நவம்பர் 27ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 3ஆம் திகதி வரை எம்பிலிப்பிட்டியவில் நடைபெறவுள்ளது.மேற்படி பரீட்சையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஜெயராஜ் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரனின் மாவீரர்நாள் உரை

# ரூபவாஹினி ஒளிபரப்பும் என தான் கூறவில்லை என்கிறார் பணிப்பாளர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தையொட்டி நிகழ்த்தவிருக்கும் விசேட உரையை, ரூபவாஹினி ஒளிபரப்பும் என்று செய்திகள் வெளியானது தொடர்பாக கருத்து வெளியிட்ட ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் லக்ஷபதி ஆராய்ச்சி- தான், இவ்வாறு தெரிவிக்கவில்லை என அறிவித்துள்ளார்.

பிரபாகரனின் உரையை ரூபவாஹினி ஒளிபரப்பும் என 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தியை இலங்கையிலுள்ள பல ஊடகங்களும் வெளியிட்டிருந்தன. இச்செய்தியில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் லக்ஷபதி ஆராய்ச்சியை ஆதாரம் காட்டப்பட்டிருந்தது.

ஆனால்- லக்ஷபதி ஆராய்ச்சி, தான் எவருக்கும் இந்தத் தகவலை வழங்கவில்லை என மறுத்துள்ளார்.

# அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் நிரந்தர பிரதேச செயலர்கள் நியமனம்

## அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர்களின் பதிற்கடமை அடுத்தமாதம் முதல் நிறுத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பல பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தர பிரதேச செயலர்கள் இல்லாமையினால், பல பிரதேச செயலர்கள் பதில் கடமையாற்றி வருகின்றனர். இதன் காரணமாக குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் முழுமையான சேவை பொதுமக்களுக்குக் கிடைப்பதில்லை. அத்துடன், புனர்வாழ்வு-அபிவிருத்தி நடவடிக்கைகளையும் துரிதமாக செய்ய முடிவதில்லை. இந்த நிலைமையை தவிர்ப்பதற்காக பதில் கடமையாற்றி வருகின்ற நிர்வாக உத்தியோகத்தர் தரத்தில் உள்ளவர்களுக்கு, பிரதேச செயலரின் அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு தொடர்ந்து சேவையாற்ற அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, நிரந்தர பிரதேச செயலர் இல்லாத, குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை வழிநடத்திச் செல்வதற்கு வசதியாக, அங்கு கடமையாற்றுகின்ற உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களுக்கு தேவையான அனைத்து அதிகாரங்கள் வழங்கப்படவிருக்கின்றன. இவ்வாறான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், தங்குதடையின்றி புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென்று யாழ் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் நம்பிக்கை தெரிவித்தார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### படையினர் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை பிரதான வீதியில் இருந்து மகாவித்தியாலயத்துக்கு முன்பாக முகாம் அமைத்து நிலைகொண்டிருந்த படையினர் நேற்று முன்தினம் அங்கிருந்து வெளியேறினர்.

தனியாருக்குச் சொந்தமான 2 வீடுகள், கடைத்தொகுதிகளில் தங்கியிருந்த படையினரே அங்கிருந்து வெளியேறியுள்ளனர். நேற்று முன்தினம் மாலை அங்கிருந்து படையினர் வெளியேறும்போது கிராம அலுவலர் முன்னிலையில் உரிமையாளரிடம் குறிப்பிட்ட கட்டடங்கள் ஒப்படைக்கப்பட்டன.

### ஊர்காவற்றுறையில் க.பொ.த(சா/த) வழி காட்டல் கருத்தரங்கு

மானிப்பாய் பரிஷ் லியோ கழகம், தீவக லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடாத்தும் - க.பொ.த சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு - இன்றும், நாளையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு இலவச மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படவுள்ளன. எனவே பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களையும் இதில் பங்கு பற்றி பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### கரம்பன் கிராமத்துக்கு குடிநீர் வசதி

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 77ஆவது அவதார தினத்தையொட்டி-வடபிராந்திய ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவன இணைப்புக்குழுவால்-வடமராட்சி தென்கிழக்கில் உள்ள கரம்பன் கிராமத்திற்கு குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழுள்ள சுமார் 18 வரையிலான குடும்பங்களே இக்கிராமத்தில் வசிக்கிறார்கள் என்பதும், இக் கிராமம் மருத்துவ, கல்வி, போக்குவரத்து உட்பட சகல வசதிகளும் இல்லாத ஒரு கிராமமாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கோப்பாய்ஆசிரிய கலாசாலையில் மாவீரர் தின நிகழ்வுகள்

மாவீரர் தின எழுச்சி வாரத்தையொட்டி கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மற்றும் கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் இணைந்து - கலாசாலை நுழைவாயிலில் மாவீரர் வளைவுகளையும் பதாகைகளையும் கட்டி சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித் துள்ளனர்.

மேற்படி கலாசாலை மாணவர்கள் சிரமதானம், மரம் நடுகை, இரத்ததானம் வழங்கல் போன்ற நிகழ்வுகளை இவ்வாரத்தில் நடாத்தி வருகின்றனர். (96)

# விடுதலை செய்யக் கோரி 6 புலிகள் மனுத்தாக்கல்

(கொழும்பு நிருபர்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு விடுதலைப் புலிகளும் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

கும்புறுப்பிட்டி முகாமருகே இருந்த குண்டுகளை தாம் அழிப்பதற்காக கொண்டு சென்ற வேளையிலேயே தாம் கைது செய்யப்பட்டதாகவும்,

தம்மைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது நீதிக்குப் புறம்பான செயல் எனவும் இவர்கள் தமது பிணை மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

# ஒஸ்லோ உதவி வழங்கும் கூட்டம் குறித்து சுவீடன் தூதுவர் தமிழ்ச் செல்வனுடன் பேச்சு

(நமது நிருபர்)

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், சுவீடன் அரசாங்கம் வழங்கவுள்ள நிதியுதவி குறித்தும், அவை எப்படிப்பட்டவையாக அமைய வேண்டும் என்பது குறித்தும், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சுவீடன் நாட்டுக்குத் தூதுவருடன் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

கடந்த புதனன்று காலை கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. சுவீடன் நாட்டுத் தூதுவர் ஆன்மேரி பொலனியஸ் இந்தச் சந்திப்பின் போது, ஒஸ்லோ மாகாநாட்டில் இலங்கைக்கு வழங்கப்பட வேண்டிய நிதியுதவிகள் குறித்து பேச்சுக்களை நடாத்தினார்.

பின்னர் இச்சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன், வடகிழக்குப் பகுதி மக்களுக்கான புனர்வாழ்வு, கண்ணிவெடிகளை அகற்றுவது போன்றவற்றுக்கு பெருமளவு நிதி உதவியைத் தாம் சுவீடனிடம் இருந்து எதிர்பார்ப்பதாக தூதுவர் ஆன்மேரி பொலனியஸிடம் கோரிக்கை விடுத்ததாகத் தெரிய வருகின்றது

# தென்மராட்சிப் பகுதியில் கடும் மழையால் பெருமளவு வயல் நிலங்கள் வெள்ளத்தில்!

(யாழ்ப்பாணம்)

கடந்த இருதினங்களாக பெய்த கடும் மழையினால் தென்மராட்சிப் பகுதியிலுள்ள வயல்களில் வெள்ளம் நிரம்பி வழிகின்றது. இதனால் 236 ஹெக்டேயர் வயல்களிலுள்ள நெற்பயிர்கள் அழியும் அவலநிலை தோன்றியுள்ளது.

அதிகமான மழை வீழ்ச்சியினால், நெல் வயல்களிலுள்ள வரம்புகளை உடைத்து நீரினை வெளியேற்றுவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள- இடைக்குறிச்சி, நாவற்காடு, குடமியன், அறுகம்புல்வெளி, கரம்பைக் குறிச்சி, சரசாலை ஆகிய பகுதிகளிலுள்ள வயல் நிலங்களே பெரும் வெள்ள அழிவுக்கு உள்ளாகியுள்ளதாக கமநல திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வாரம் பெய்த மழையே இவ் வருடத்தில் குடாநாட்டில் பெய்த அதிகூடிய மழை வீழ்ச்சியாக பதிவாகியுள்ளது. (ச)

# பொலித்தீன் பாவனைத் தடை சட்டம் விரைவில் வருகிறது!

(கொழும்பு)

இலங்கையின் பொலித்தீன் பைகள் உற்பத்தி செய்வதை சட்டபூர்வமாகத் தடுப்தற்கு சுற்றுச்சூழல் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிய சட்டநகல், அடுத்த வாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என சுற்றுச்சூழல் அமைச்சர் ருக்மன் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு இலங்கையில் உள்ள 168 பொலித்தீன் உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

அத்தியாவசியமான தேவைகளுக்கும், உற்பத்தி செய்யப்படும் விசேட பொலித்தீன் பைகளுக்கு, வரி அறவிடவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது பற்றிப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றதென்றும் இதற்கு அமைச்சர் லொக்கு பண்டார தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

### கண்ணாடித் தொழிற்சாலை பொதுக்கூட்டம்

(நீர்வேலி)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை காலை 11 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

### பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சா/தரப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் - நாளை காலை 10 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கோப்பாய்க் கோட்டம் தவிர்ந்த, யாழ்.வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம், பளைக் கோட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த - பரீட்சைக் கடமைகளில் பங்குபற்றும் இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொளளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தற்போதைய சர்வதேச உதவி போதுமானதாக இல்லை

## மேலும் உதவி கோரி புலிகள் - அரசு கூட்டாக வேண்டுகோள்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள வேளையில், உதவி வழங்கும் நாடுகளிடம்- 19 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய புனரமைப்பு, புனர்வாழ்வுக்கு வேண்டிய உதவிகளை இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கூட்டாகக் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- தற்பொழுது வட. கிழக்கு புனர்வாழ்வுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி, ஐக்கிய நாடுகள் முகவர்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன உடனடி உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிட வேண்டிய விடயமேயாயினும் அவை சிறியளவிலானதே.

19 ஆண்டுகள் யுத்தத்தினால் 60,000 மக்கள் கொல்லப்பட்டதுடன், சமூக பொருளாதார உட்கட்டுமானங்கள் பாரியளவில் அழிக்கப்பட்டுள்ளன. மக்களின் குடியிருப்புகள் சிதைக்கப்பட்டுள்ளதுடன் பெருமளவு விவசாய நிலங்கள் செய்கை பண்ணப்படாது இருக்கின்றன. முற்றுமுழுதாக உற்பத்தி மற்றும் அதனுடன் இணைந்த மூலதனங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. எனவே, துரித புனர்வாழ்வு, புனரமைப்புக்கான உதவித் திட்டங்கள் உடனடியாகத் தேவையாக உள்ளது.

திட்டங்களின் இறுதி இலக்குகள், அதன் எல்லைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

அரசாங்கம், விடுதலைப் புலிகள், ஐக்கிய நாட்டு நிறுவனங்கள் அனைத்தும் ஒரே மேசையில் வட. கிழக்கின் தேவை, மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும்

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பின்வரும் விடயங்களுக்கு முதற் தெரிவுநிலை கொடுத்துள்ளன.

உள்ளூரில் இடம்பெயர்ந்த 8,00,000 - 10,00, 000 வரையிலான மக்களைக் மீளக்குடியர்த்த வேண்டும்.

60,000க்கும் மேற்பட்ட அகதிகள் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை இலங்கையில் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும். இதற்கு ஒரு குடும்பத்திற்கு 1000 அமெரிக்க டொலர்கள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

2 மில்லியன் நிலக் கண்ணி வெடிகள் வட,கிழக்குப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 1.5 மில்லியன் நிலக்கண்ணி வெடிகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் மட்டும் புதைக்கப்பட்டுள்ளது. நிலக்கண்ணி வெடிகளை அகற்றி, விவசாய நிலங்களில் மீள விவசாயத்தினை மேற்கொள்ளவும் மீள்குடியேற்றத்தினை மேற்கொள்ளவும் ஆவன செய்யப்பட வேண்டும்.

பெண்கள், சிறுவர்களைப் பொறுத்தவரையில்- மூன்று இலட்சம் சிறுவர்கள் நேரடியாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பாதுகாப்பினையும் கவனத்தினையும் அளிக்க வேண்டியதோடு அவர்களது சுகாதாரத் தேவைகள், கல்வித் தேவைகள், உரிமைகள் என்பனவற்றுக்கு முதற் கவனம் அளிக்கப்படல் வேண்டும்.

30,000 பெண்கள் யுத்தத்தால் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மரபுக்கல்வியோ அல்லது உரிய தொழில் தேர்ச்சியோ அற்றவர்கள். எனவே, இவர்களுக்குச் சுயதொழில் வாய்ப்புக் கொடுப்பதுடன் அவர்களது ஆற்றல்களை மேம்படுத்த வேண்டிய நிலையும் உள்ளது.

பாரிய கைத்தொழிற்சாலைகளான- காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை ஆகியவற்றைப் புனரமைத்து, தொழிற்தேர்ச்சியுள்ள தொழிலாளர்களுக்கும் தொழில் தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்க வேண்டியுள்ளது.

புதிய திட்டத்தின்படி உடனடியாக- வீதிகள், மீள் கட்டுமானம், போக்குவரத்து வசதிகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள், மீன்பிடி, கைத்தொழில் விருத்திகள் மற்றும் தொடர்பாடல் என்பவற்றுக்கு, அழிவுற்றுள்ள வடக்கு கிழக்கில் உடனடியாக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது

இவற்றுக்காக சர்வதேச நிறுவனங்கள் வழங்கும் நிதி, உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பதனைச் சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களே மேற்பார்வை செய்து கொள்ள வேண்டும் எனவும் அந்த கூட்டறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

உங்களின் அழகான புன்னகைக்கு
நாடுங்கள்
எரிக் கணேஸ்
564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பற்களை கட்டிடவும், பற்களுக்கு கிளிப் போடவும்,
கட்டுப் பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை பெறவும்
கண்களை பரிசோதித்து, முகத்துக்கேற்ப கண்ணாடி
பெறவும் நாடவேண்டிய ஸ்தாபனம்
எரிக் கணேஸ்
கிளை: சுன்னாகம்.
கொக்குவில்
(சி-198)

# ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக நேற்றும் மாணவர் போராட்டம்

ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவை விட்டு வெளியேறும்படி கோரி நெடுந்தீவு மக்கள் நடாத்திவரும் போராட்டத்திற்கு ஆதரவாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து ஈ.பி.டி.பி.யினரை வெளியேறக்கோரியும் நேற்று இரண்டாவது நாளாகவும் ஈ.பி.டி.பி தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது.

நேற்றுக்காலை 11 மணியளவில் ஸ்ரீதர் தியேட்டர் கட்டிடத்தில் இயங்கிவரும் ஈ.பி.டி.பி தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக, உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் பேருந்துகளில் வந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டத்தில் கூடுதலான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

நேற்றைய மறியல் போராட்டத்தின் போதும் விசேட பொலிஸ் பிரிவினர் அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (லி)

# கஜேந்திரன், பரணிதரனுக்கு தொலைபேசியில் மிரட்டல்

சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரனுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பரணிதரனுக்கும் தொலைபேசி மூலம் நேற்றுக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 11 மணியளவில் மாணவர் பேரவை அலுவலகத் தொலைபேசிக்கு வந்த இந்த அழைப்பிலேயே 'கஜேந்திரனையும் பரணிதரனையும் சுடுவோம். கவனமாக இருக்கச் சொல்' என மிரட்டல் விடுக்கப்பட்டது.

இத்தொலைபேசி அழைப்பு வந்த நேரத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் ஈ.பி.டி.பி தலைமைக் காரியாலயத்தின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே.பரணிதரன் நெடுந்தீவு மக்களுக்கு வழங்கவென உணவுப் பொருட்களைக் அங்கு எடுத்துச் சென்றிருந்தார்.(லி)

### நயினாதீவு...

மூலம் குறிகாட்டுவான் சென்று அங்கிருந்து நெடுந்தீவு செல்லுமாறு கூறிய கடற்படையினர் அவர்களை குறிகாட்டுவான் செல்வதற்கு மட்டும் அனுமதித்தனர். பின்னர் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் அவர்கள் புங்குடுதீவு அழைத்து வரப்பட்டு சர்வோதயக் கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவை சர்வோதயம் வழங்கி வருகின்றது. (113,112)

### யாழ்.பல்கலை...

நயினாதீவு செல்ல கடற் படையினர் அனுமதித்தனர்.

தாம் கொண்டு சென்ற பொருட்களுடன் மாணவர்கள் நயினாதீவு சென்றபோது, அங்குநின்ற நெடுந்தீவு மக்கள் குறிகாட்டுவானுக்குப் புறப்பட்டுசென்று விட்டமை தெரிய வந்தது.

நயினாதீவிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்ல முடியாத நிலையில், இம் மாணவர்கள் மீண்டும் புங்குடுதீவு திரும்பினர். தாம் மீண்டும் இன்று நெடுந்தீவு செல்ல முயற்சிப்போம் என பல்கலைக்கழக மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (112)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
E.Mail - thangan 672002 @ yahoo .com
T.P-021-2222588
தரம் 6 முதல் பல்கலை மற்றும் அலுவலர்கள் வரை ஒரே கூரையின்கீழ் மிகத் தரமான கல்வியை வழங்குகின்றது.
05-12-2002 இல் ஆரம்பிக்கும் புதிய தவணைக்கு தரம் 6 முதல் A\L வரையான புத்தக வகுப்புகளுக்கு (Text books) புதிய அனுமதிகள் தற்போது நடப்பில் உள்ளது.
01-12-2002 இல் புதிய இலக்கண வகுப்பு பிரிவு V ஆரம்பம்
Sat and sun 5p.m (old)
புதிய அனுமதிக்கான பதிவுக் கட்டணம் 100/-
இலக்கணக் கற்கை நெறிக்கான முழுக்கட்டணம் 1000/-
புத்தக வகுப்பிற்கான வருடாந்தக் கட்டணம் 600/-
மேலதிக விபரங்களுக்கு,
ஆசிரியர்
K.T. Rajah(S.S)
Director.
Why fear, We are here
(சி-191)

### நெடுந்தீவு .....

மாக அழைக்கப்பட்டிருந்தனர்.

இக்கூட்டத்தின் ஆரம்பத்தில், தமது கட்சி மீது பாதுகாப்பு அச்சுறுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் பதற்றநிலை உருவாகியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே. என்.டக்ளஸ் தேவானந்தாவினால் கூறப்பட்டது.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நெடுந்தீவு சம்பவங்கள்- யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முரணான செயலாக இருந்தும் இவ்விடயத்தில் புலிகளுடன் பேசியே இதற்குத் தீர்வு காணமுடியும் என்றார். அடுத்த தடவையில் பிரதமருடன் தாம் நடத்தும் சந்திப்பின்போது இது குறித்து அவருடன் பேசவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேற்படி விடயங்கள் குறித்து எதிர்வரும் 25ஆம் திகதி ஒஸ்லோவில் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கும்போது அவர்களுடன் இவ் விடயம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொதுவான செயற் திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயற்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கைக்கு பதிலளித்த கண்காணிப் புக் குழுவினர், தம்மால் அரசியற் பணிகளை மேற்கொள்ள முடியாது எனவும் ஆனால் அனைத்து தமிழ்க் கட்சிகளும் இதற்கு ஒத்துழைப்புத் தர முன்வந்தால் இந்த நடவடிக்கைக்கு இணைப்பாளர்களாகத் தம்மால் செயற்பட முடியும் எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தரப்பில் கூறப்பட்டது.

# ஒஸ்லோ செல்லும் அரசு - புலிகள் உறுப்பினர்கள் விபரம் அறிவிப்பு

(ஒஸ்லோ)

ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பங்குபற்றிய குழுவின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ்,மலிந்த மொறகொட, நூர்தீன் மசூர் ஆகியோருடன் அரசாங்க சமாதானச் செயலகத்தின் தலைவர் பேணாட் குணதிலக, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த, வெளிநாட்டமைச்சின் செயலாளர் நிஹால் ரொட்ரிகோ, வெளிநாடுகளுக்கான தூதுவர்களாகக் கடமையாற்றும் வி.கே.வால்சன், தேவிந்த சுபசிங்க ஆகியோர் குழுவில் இடம்பெறுகின்றனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழக முக்கியஸ்தர் ஜோய் மகேஸ்வரன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் பங்கேற்பதாக ஒஸ்லோவிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

# கல்லறை தழுவும் கானங்கள் நேற்று அறிமுக விழா

நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா இசைக்குழுவினரின் 'கல்லறை தழுவும் கானங்கள்' ஒலிப்பேழை அறிமுக விழா நேற்று யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

ஈகச்சுடரினை மாவீரர் அன்புவின் தாயாரும் கரும்புலி ஒருவரின் தந்தையாரும் ஏற்றிவைக்க பொதுச் சுடரினை நிதர்சனத்தைச் சேர்ந்த பூமா ஏற்றி வைத்தார்.

மாணவர் அமைப்பைச் சேர்ந்த விதுரன் தலைமையில் நடைபெற்ற அறிமுக விழாவில்- என்.வி. நவரத்தினம் வரவேற்புரை நிகழ் த்தினார். ஒலிப்பேழையின் முதல் பிரதியை கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் நிஷாந்தன் வெளியிட்டு வைக்க இசையமைப்பாளர் கண்ணன் பெற்றுக்கொண்டார்.

### ஈ.பி.டி.பி....

திப்பில் கலந்து கொண்டனர்.

வடகிழக்கில் அரசியற்கட்சிகளின் சுதந்திரச் செயற்பாடு,அதற்காக போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அனுசரணையுடன் ஒரு நிகழ்ச்சித் திட்டம் வகுத்தல் போன்ற விடயங்கள் நேற்று ஆராயப்பட்டன. எனினும் அங்கு பலத்த விவாதம் உருவானது.

கூட்டமைப்பினர் - ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவிலிருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தபோது, டக்ளஸ் தேவானந்தா அதை முற்றாக நிராகரித்தார். இதையடுத்து பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது பிரதமர் ரணில் எதுவும் கூறாது அமைதியாகவே காணப்பட்டார். நெடுந்தீவை விட்டு ஈ.பி.டி.பி. வெளியேறி, மீண்டும் அங்கு கண்காணிப் புக் குழுவினருடன் சென்று தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என கூட்டமைப்புத் தரப்பில் கேட்கப்பட்டது. அதற்கு ஈ.பி.டி.பித் தரப்பு இணங்கவில்லை.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் மீண்டும் வருவதை அங்குள்ள மக்களே விரும்பவில்லை எனவும், ஈ.பி.டி. பியினர் கடந்த காலத்தில் செய்த நெறிமுறையற்ற செயல்களும் தற்போது இரவோடு இரவாக மக்களுக்குத் தெரியாமல் ஆயுதங்களுடன் வந்திறங்கி அடாவடித்தனம் புரிந்ததும் மக்களிடையே பெரும் எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளதாகக் கூட்டமைப்பினர் பிரதமர் ரணிலிடம் தெரிவித்தனர். எனினும் இச்சந்திப்பு முடிவடையும் வரை எவ்வித தீர்மானங்களுக்கும் வரமுடியாத நிலையே காணப்பட்டது.

### அரசாங்கம்....

கண்தெரியாத எலிகள் என்றும், தமிழ்க்கூட்டமைப்பினரை கிறிஸ்மஸ் பண்டிகை எப்போது வருமெனக் காத்திருக்கும் வான் கோழிகள் என்றும் குறிப்பிட்டார்.

ஒஸ்லோ மாநாடு - சர்வதேச பொங்கு தமிழ் நிகழ்வென்று கூறிய அவர், விடுதலைப் புலிகள் தமது பலத்தை ஒஸ்லோவில் காட்டப் போகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.